பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 04 புதன்கிழமை 20.12.2023 கதிர் 404

# தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு அரசியல்வாதிகளே காரணம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா சாட்டை

இலங்கையின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குஅரசியல்வாதிகளே காரணமாக உள்ளனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றுநடைபெற்ற அமைதிக்காக மதங்கள் என்ற உயர்மட்டக்கலந்துரையாடலில் பங்கேற்றுஉரையாற்றும்போதே அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைதிக்குப் பாதகத்தை எற்படுத்தும் செயற்பாடுகளுக்கோ அல்லது தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கோமக்கள் ☞2



## இனி அது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியின்தலைமைப் பதவிக்குஇந்தத்தடவைமும்முனைப் போட்டி அனேகமாக நிச்சயம் என்றாகிவிட்டது. வேட்பாளர்கள் தமது வேட்புமனுவைத் திரும்பப் பெறுவதற்குநாளைவரைக்கும்தான் கால அவகாசம் இருக்கின்றது. ஆனால் அதற்கிடையில் யாரும் பின்வாங்கப் போவதில்லை என்கிற முடிவில் தலைமைக்குப் போட்டியிடும் சுமந்திரன், சிறீதரன், யோகேஸ்வரன் ஆகியோர் திட்டவட்டமாக இருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது.

தலைமைக்கான போட்டியில் சுமந்திரனும்சிறீதரனும்இருப்பார்கள் என்பது நீண்ட காலமாகவே எதிர்பார்க்கப்பட்டதுதான். அவர்கள் இருவரும் வடக்கைச் ☞2

## தானியங்கி ஆணுறை இயந்திரம் திடீர் மாயம்

### பருத்தித்துறையில் சம்பவம்

தானியங்கி ஆணுறை வழங்கும் இயந்திரம் ஒன்று யாழ்ப்பாணத்தில் காணாமல் போயுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் பொருத்தப்பட்டிருந்த தானியங்கி ஆணுறை இயந்திரமே காணாமல்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் தொற்றினைக் கட்டுப் படுத்தும் வகையில், நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் தானியங்கி ஆணுறை வழங்கும் இயந்திரங்கள்பொது இடங்களில் ☞2

## வெளிநாட்டுக் கப்பல்களின் ஆய்வுக்கு இலங்கை கடலில் ஒரு வருட கால தடை

இலங்கைக் கடல் எல்லைக்குள் வெளிநாட்டுக்கப்பல்கள்ஆய்வுகளை மேற்கொள்ள அடுத்த ஒரு வருடகாலத்திற்குஅனுமதி வழங்குவதில்லை என்று இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கைக் கடல் பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ள சீனா தொடர்ந்து கப்பல்களை அனுப்பி வரும் நிலையிலும் இந்தியா தொடர்ந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையிலும் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அயலுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

அரசு இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்து சம்பந்தப்பட்ட நாடுகளுக்குத் தெரியப் படுத்தியுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையின் கடற்பரப்பில் மற்றுமொரு ஆய்வுக் கப்பலை நிறுத்துவதற்கு சீனா அனுமதி கோரியதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சீன ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக் கப்பல் ஷியான் 6 இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி கடந்த ஒக்டோபரில் இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் வந்து தரித்து நின்ற பின்னர், இந்தியப் பெருங்கடலின் நீர்நிலையில் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் (ஹிபுயூபு) இணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது.

இத்தகைய ஆய்வுகளில் இலங்கையும் சம பங்காளியாக இருக்கவேண்டுமாயின் நாட்டின் ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்த வேண்டியிருக்கிறது என்று கூறிய அமைச்சர், இந்தக் காரணங்களால் எந்தவொரு ஆய்வுக்கப் பலுக்கும் இலங்கைக்கு வர ஒரு வருடகால அவகாசம் தேவை என்று அரசு தீர்மானித்துள்ளது என்றார்.

புவிசார் ☞2

## வட்டுக்கோட்டை இளைஞன் சாவு: ஜனவரி 2இல் நீதிமன்றக் கட்டளை

வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை வழக்கில் மரண விசாரணை தொடர்பான கட்டளை எதிர்வரும் ஜனவரி 2ம் திகதி வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இறந்த நபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய பொலிஸார், வட்டுக்கோட்டைபொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி உள்ளிட்ட சிலர் சாட்சியம் வழங்கினர்.

இதே வேளை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த முன்னர் உயிரிழந்தவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெல்லிப்பழை சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாகச் சமர்ப்பிக்க ஆவன செய்யுமாறு நீதிமன்ற பதிவாளருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

இறப்பு விசாரணை தொடர்பான கட்டளைக் காக எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. வழக்கில் உயிரிழந்த இளைஞன் சார்பில் பெருமளவான சட்டத் தரணிகள் ஆஜராகினர்.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளன ☞2

## இமாலயப் பிரகடனம் தெளிவற்றது அஸ்கிரிய பீடம் இப்படிக் கருத்து

### குழப்பமாட்டோம் எனவும் தெரிவிப்பு

பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தமிழ்புலம்பெயர்அமைப்பான உலக தமிழர் பேரவை சிறந்த இலங்கைக்கான சங்க மன்றத்தின் புத்த பிக்குகள் குழுவொன்றுடன்இணைந்து முன்னெடுத்துள்ள இமாலயப் பிரகடனம் தெளிவற்றது என அஸ்கிரிய பீடம் அறிவித்துள்ளது. எனினும் முன்னேற்றகரமான விடயங்கள் இடம் பெற்றால் அதற்கு பௌத்த மதகுருமார் ஆதரவளிப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் உலக தமிழர் பேரவையும் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றமும் இணைந்து இமாலயப் பிரகடனத்தினை வெளியிட்டதுடன் ஜனாதிபதி,

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரிடம் அதன் பிரதிகளையும் நேரில் சென்றுவழங்கியி- ☞2

## கொழும்பு மற்றும் கம்பஹாவில் விசேட டெங்கு ஒழிப்புத் திட்டம்

### இராணுவம், பொலிஸ் ஆதரவும் பெறப்படும்

கொழும்பு வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு ஒழிப்புநடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பங்களித்த வொல்பெக்கியா விசேட டெங்கு ஒழிப்பு திட்டத்தினை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் டெங்கு பரவல் அதிகமாக காணப்படும் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்துமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். ☞2

## ஜனவரி மாத முதல் வாரத்தில் வடக்குக்கு வருகிறார் ரணில்

### பாலியாற்றுத் திட்டத்தையும் தொடக்கி வைப்பார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனவரி முதல் வாரத்தில் வடக்குக்கு வருகை தரவுள்ளார். இந்தப்பயணத்தின் போதுஅவர்யாழ்ப்பாணத்திற்கான குடிதண்ணீர் திட்டமான பாலியாற்றுத் திட்டத்தையும் தொடக்கி வைப்பார். இந்தத் திட்டதுக்கான நிதி அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 4 வடக்குக்கு வரும் ஜனாதிபதி மூன்று நாள்கள் இங்கு தங்கியிருப்பார். இந்தப் பயணத்தின்போது அவர் பாலியாற்றுத் திட்டத்தை தொடக்கி வைப்பார் என்று மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடக்கு ☞2

## இமயமலை பிரகடனத்தின் கபடநோக்கமும் திரிபுகளும் திம்பு கோட்பாடுகளை புறமொதுக்கும் குயுக்தி அரசியல்

### உலகத் தமிழர் பேரவை – சங்க மன்ற முயற்சிகளை முற்றாக நிராகரித்து தாயகத் தமிழர் தரப்புகள் பல அறிக்கை

திம்புக் கோட்பாடுகளைப்புறமொதுக்கும், குயுக்தி அரசியலை முன்னெடுக்க விழையும், இமயமலைப் பிரகடனத்தின் கபட நோக்கங்களையும், திரிபுகளையும் முற்றாக நிராகரிக்கிறோம்

இவ்வாறு இலங்கையில் உள்ள பல் கலைக்கழகப் பேராசிரியர்கள் சிலர், ஆன்மீகத் தலைவர்கள் சிலர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர், சமூகச் செயற்பாட்டாளர்கள் சிலர் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் அமைப்பான உலகத் தமிழர் பேரவை மற்றும் சிறப்பான இலங்கைக்கான சங்க மன்றம் ஆகியன இணைந்து வெளியிட்ட இமயமலைப் பிரகடனம் தொடர்பில் இந்த அறிக்கை விடுக்கப் பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தீவின் அரசியல் அதிகாரத்தின் மையப் புள்ளியாக விளங்குவது சிங்கள பௌத்த மேலாண்மைக் கருத்தியல் ஆகும். இந்தக் கருத்தியலைச் சூழக் கட்டமைக்கப்பட்ட வெகுசனக் கவர்ச்சி அரசியலே, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத் தேவையான தேர்தல்வாக்குப்பலத்தை வழங்குகிறது. அத்துடன் ஆட்சியாளர்கள்பிறதேசிய இனங்களையும், தமது இனத்தில் உள்ள எதிர்க் கருத்தாளர்களையும் ஒடுக்குவதற்குத் தேவையான அங்கீகாரத்தையும் இக்கருத்தியலே வழங்குகிறது. ஆட்சியின் வினைத்திறனின்மை, ஊழல் போன்றவற்றை சகித்தும் அங்கீகரித்தும் செல்வதற்கான மனநிலையையும் இந்தகருத்தியலே தோற்றுவிக்கிறது.

சிங்கள பௌத்த மேலாண்மை அடிப்படையிலான அரசுக் கட்டமைப்பு, பண்பாட்டுக் கட்டமைப்பு, அவற்றின் விளைவாக எழுந்த அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி என்பவற்றை அதே தளத்திலிருந்து, ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சேர்ந்தவர்கள் என்பதால் கிழக்கில் இருப்பவர்களுக்குத் தலைமை தாங்கும் திறமை இல்லை என்று யாரும் கருதிவிடக்கூடாது என்பதற்காகவே தானும் போட்டிக் களத்திலிருந்துவிலகப்போவதில்லை என்பதில் யோகேஸ்வரனும் பிடிவாதமாக இருக்கின்றார்.

இப்படி ஆளுக்காள் போட்டி போட்டால் கட்சி பிளவுபட்டுவிடும், அப்படிநடக்காமல் ஒற்றுமையைப் பாதுகாக்கவேண்டும்என்றுதலைவர் மாவை சேனாதிராசா இன்னும் தனக்கு நெருக்கமானவர்களிடம் புலம்பிக்கொண்டுதான் இருக்கின்றார். அத்தோடு மற்றொன்றையும் அவர் தொடர்ந்து கூறியும் வருகிறாராம். இப்படி மும்முனைப் போட்டியால் கட்சி பிளவுண்டு சிதறி விடாமல் இருப்பதற்காக தன்னையே தொடர்ந்தும் தலைவராக இருக்கும்படி தொண்டர்கள் பலரும் வலியுறுத்தி வருகின்றார்களாம்.

கட்சியைப் பாதுகாக்கவேண்டும், அதுதான் முக்கியம், அதற்கு நீங்கள் தலைமையில் தொடர்வதுதான் ஒரே வழி என்று அவர்கள் கூறுகின்றார்களாம் எனத் தனக்கு நெருக்கமானவர்களிடம் மாவையர் உருக்கமாகக் கூறியிருக்கிறார். தலைமையைத் தொடர்ந்தும் தக்க வைப்பதற்கான அவரது நப்பாசை அதன் மூலம் பட்டவர்த்தனமாக வெளிப்படுகின்றது. இருந்தாலும் அதற்கேதும் வழி வகை இருக்கின்றதாஇப்போதுஎன்பதுதான் கேள்வி?

தலைமைப் பதவிக்குப் போட்டி யிடுவதற்கான வேட்புமனுவை அவர் தாக்கல் செய்யவில்லை. அதனால் போட்டிக் களத்திற்குள் அந்த வழியால் அவரால் வர முடியாது. இரண்டாவதுவழி, பொதுக் குழுக் கூட்டத்தை எப்படியாவது ஜனவரியில் நடக்கவிடமால் செய்வது மட்டுமே. அதற்கும் மற்றவர்கள் இடமளிப்பார்களா என்பது கேள்விக்குரியதுதான். அடுத்த தலைமைப் போட்டி நடந்தேயாகவேண்டும் என்கிற நிலைப்பாட்டில்தான் முக்கியமாக சுமந்திரன், சிறீதரன் ஆகியோர் இருக்கின்றார்கள். அப்படியிருக்கையில், பொதுக்குழுக் கூட்டத்தை அவ்வளவு இலகுவாக மாவையரால்ஒத்திப்போட்டுத்தனது தலைமையைத் தக்க வைக்க முடியாது.

அப்படியேபொதுக்குழுக்கூட்டத்தை ஒத்திவைப்பதாயின் மாவையர் கையில் இருக்கும் ஒரே அஸ்திரம், ஒழுக்காற்று நடவடிக்கைதான். அதாவது திருகோணமலையில் கிளைக்குழுத் தேர்தல்களில் தனது ஆதரவாளர்கள் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என்று பெருந் தலைவர் இரா. சம்பந்தன் குற்றஞ்சாட்டியிருக்கிறார். அதுகுறித்து ஒழுக்காற்றுக் குழுத் தலைவருக்கு அவர் ஒரு கடிதமும் அனுப்பி வைத்துள்ளார். அதுபோன்றே கொழும்பு கிளை நிர்வாகத் தெரிவு தொடர்பிலும் அங்குள்ள 3 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்திருக்கிறார்கள். இதுபோல காங்கேசன்துறைத் தொகுதியிலும் அநீதிகள் நடந்திருப்பதாக மாவையரும் தெரிவித்து வருகின்றாராம். இவற்றைக் காரணமாகக்காட்டி இந்த -மூலக் கிளைகளின் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டுத்தான் பொதுக் குழுக் கூட்டத்திற்குச் செல்லலாம் என்று தலைவர் கூறக்கூடும்.

ஆனால், அந்த ஒழுக்காற்று முறைப்பாடுகளைவிசாரிப்பதற்காக ஒழுக்காற்றுக் குழுவைக் கூட்டுவதற்குச்செயலாளர் அனுமதி கொடுக்கவேண்டும். இதுவரை அந்த அனுமதி செயலாளரால் வழங்கப்படவில்லை. இனியும் வழங்கப்படுமா என்பதும் தெரியாது. அத்தகைய நிலையில், ஒழுக்காற்று நடவடிக்கையையும் நம்பியிருக்க முடியாது. பின்னர் எந்த நம்பிக்கையில் தன்னையே தொடர்ந்தும் தலைவராக இருக்கும்படி தொண்டர்கள் கேட்கிறார்கள்என்றுகூறுகின்றாரோ தெரியவில்லை.

தலைவர் போட்டியிலிருந்து வேட்பாளர்களை விலகிக் கொள்ளுமாறு வலியுறுத்த அவர் எடுத்த சிறு முயற்சிகூட வெற்றியளிக்கவில்லை என்றே கேள்வி. அதனால் அனேகமாக ஜனவரி மாதம் திட்டமிட்டபடி பொதுக் குழுக் கூட்டம் நடக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிடையில் தானே பதவியில் தொடரவாவது மாவையர் ஏதாவது புத்திசாலித்தனமாகச் செய்கிறாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தீர்க்கப்படாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக அமையவில்லை. உதாரணமாகபெரும்பான்மையான மக்கள் மோதலை விரும்பவில்லை என்பதை நான் அறிவேன்.

அவர்கள்போரைவிரும்பவில்லை. அவர்கள் இந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளுடனும் நிம்மதியான, அமைதியான வாழ்வையே விரும்புகின்றார்கள். அவ்வாறாயின் ஏன் இந்த மோதல் நடைபெறுகின்றது? அதற்கான காரணம்என்ன? இதற்கானபதிலை நாம் இலகுவாகக் கூறமுடியும்.

அரசியல்வாதிகளே அதற்கான காரணம். தேர்தலில் வெற்றி பெற்று தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதற்காக மத முரண்பாடுகளே சிறந்த வாசகம் என்றுஅவர்கள்நினைக்கின்றார்கள்.

அதற்காக அவர்கள் மற்றைய வர்களைப்பயன்படுத்துகின்றார்கள். இது அனைத்து அரசியல்வாதிக ளுக்கும் பொருந்தாது. ஆனால் அவர்களில் அனேகமானவாகள் அவ்வாறே உள்ளனர் என்றார்.

## தானியங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தப்பட்டிருந்தன.

அவற்றில் ஒன்று பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைவளாகத்திலும் பொருத்தப்பட்டிருந்தது. அந்தத் தானியங்கி ஆணுறை இயந்திரமே காணாமல் போயுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## இமாலயப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அஸ்கிரிய பீட பேரவைகளின் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர், தேசிய ஐக்கியத்தினையும் நல்லிணக் கத்தையும் ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும்எந்தமுயற்சிகளையும் அஸ்கிரிய பீடம் குழப்பாது எனத் தெரிவித்துள்ளார். எனினும் அது நாட்டின் சகவாழ்விற்கும் ஒருமைப்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்காமல்இருக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இமாலயப் பிரகடனத்தின் நோக்ககங்கள் தெளிவற்றதாக உள்ளது என தெரிவித்துள்ள அவர் இதனைநடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இந்த பிரகடனத்தின் நோக்கம் குறித்து கவனம் செலுத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏதாவது சிறந்த விடயங்கள் இடம்பெறவேண்டும் என அஸ்கிரிய பீடம் விரும்புகின்றது. அதனால் குறிப்பிட்ட பிரகனடத்தை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து கருத்து தெரிவிக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பன்முகத்தன்மை கொண்ட இலங்கையைகட்டியெழுப்புவதற்கு உதவுமாகஇருந்தால்பிரகடனத்திற்கு ஆதரவளிப்போம் என மெதகம தம்மானந்த தேரர் மேலும் தெரிவித்தார்.

## ஜனவரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு பாலியாற்று நீர் வழங்கல் திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய கலந்துரையாடல் அமைச்சரும் யாழ், மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ் மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன், நீர்ப்பாசன நீர்வழங்கல் முகாமையாளர்கள்மற்றும்துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மாகாண நீர்ப்பாசனப் பணிப் பாளர் என். சுதாகரன் பாலியாற்று குடிநீர்த் திட்டம் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தார்.

இத்திட்டம் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் அது கைகூடாத நிலையில் கடந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்த நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பலனாக அமைச்சரவை இத்திட்டத்திற்கு 250 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான அங்கீகாரம் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்காக இராணுவம் மற்றும் பொலிஸாரின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்த அவர், அரச நிறுவனங்களில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய அரச நிறுவனங்களுக்கு பொறுப்புகள் வழங்குமாறும் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல மற்றும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் இச்சந்திப்பு நடைபெற்றது. தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவுடன் டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல்மற்றும்அவற்றின்தற்போதைய முன்னேற்றம் தொடர்பில் இங்கு மதிப்பாய்வு செய்யப்பட்டது.

குறிப்பாக மேல்மாகாணத்தில் டெங்கு பரவல் அதிகரித்துக் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை மையப்படுத்தி, கடந்த காலங்களில் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

முப்படை மற்றும் பொலிசாரின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளின் காரணமாக டெங்கு பரவல் கணிசமான அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்தத் திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்துவதன் மூலம் மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பதில் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் மற்றும் கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் கொழும்பு மாநகர சபையை பிரதிநித்துவப்படுத்தும் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வட்டுக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் நவம்பர் 19ஆம் திகதி உயிரிழந்தார். பொலிஸாரினால் அடித்துச்சித்திரவதை செய்யப்பட்டதன் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பலத்த அடிகாயங்களுக்கு உள்ளாகி சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டதன் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று அவரது மருத்துவ உடல்கூறாய்வு அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில்வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 4 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## வெளிநாட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களைக் கையாள்வதில் எந்தவொரு நாட்டையும் பகைத்துக்கொள்ளாமல் இருக்க இலங்கை முற்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

அதேசமயம்இலங்கைக்குவரும் வெளிநாட்டு இராணுவக் கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறையை (றீநுஊண) இலங்கை உருவாக்கியுள்ளது. கடந்த பத்து வருடங்களில் இலங்கை கடற்பரப்பிற்கு தமது கப்பல்களை அனுப்பியஅனைத்துநாடுகளுக்கும் புதிய எஸ்ஓபி நடைமுறைகள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன என்று அமைச்சர் கூறினார்.

## இமயமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தத் தளத்தை அங்கீகரித்து மேற்கொள்ளப்படும் வளைந்து கொடுத்தல்நடவடிக்கைகளினூடாக அணுக முடியாது.

மாறாக, மேலாதிக்கக் கருத்திய லாலும் அதன் கருவிகளாலும் அடக்குமுறைக்கு உட்படும் மக்கள் சமூகங்களினது அரசியல் அந்தஸ்தை வரையறுத்து, ஏற்றுக் கொண்டு, அவற்றின்அடிப்படையில் செய்யப்படும்அரசியல்ஏற்பாடுகளின் ஊடாகவேஇந்தநெருக்கடிகளுக்கான தீர்வு அணுகப்பட முடியும்.

இதன் அடிப்படையில் ஒடுக்கப்படும்ஒருமக்கள்சமூகமான தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து அதன் அடிப்படையில் அரசியல் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனத் தேர்தல் ஜனநாயக வழிமுறைக்கு உட்பட்டும் அதற்குப் புறம்பாகவும் ஏறத்தாழகடந்தஏழுதசாப்தங்களாக கோரி வருகின்றனர். தேர்தல் வழி வந்த தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும், அதனை விடுத்து புரட்சிகர அரசியலை முன்னெடுக்க விழைந்த இளைஞர் இயக்கங்களும், ஒருமித்து முன்வைத்த திம்புக் கோட்பாடுகள் இந்தநெடும்பயணத்தில்உருவான மிக முக்கியமான கொள்கை நிலைப்பாடாகும். அந்தக் கொள்கை நிலைப்பாட்டை மேலுயர்த்தி தமது போராட்டத்தைத் தொடர்வதற்கு தமிழ் மக்கள் கொடுத்த விலை அளப்பரியது.

உலகத் தமிழர் பேரவை - சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியம் (புவுகு-ளுடீளுடு) ஆகிய அமைப்புகள் இணைந்து வெளியிட்ட'இமயமலைப்பிரகடனம்' வெளிப்படுத்தும் ஒன்று, இரண்டு, மூன்று நான்கு எனும் கூற்றுக்கள், மேற்குறிப்பிட்டவற்றை முற்றிலும் புறமொதுக்கி, இப் பிரச்சினையைப் புரிந்துணர்வின்மைப்பிரச்சினையாகவும் தனிமனிதக் -குழு அடிப்படையிலானமனிதஉரிமைப்பிரச்சினையாகவும் கோட்பாட்டுச் சிதைப்பினைமேற்கொள்கின்றன. இப்பிரச்சனையை அற நீக்கமும், அரசியல் நீக்கமும் செய்ய விளைகின்றன. சிங்கள பௌத்த மேலாதிக்கக் கருத்தியலின்சகிப்புஎல்லைகளுக்குள் குறுக்க முயல்கின்றன.

இப் பிரகடனத்தின் ஐந்தாவது கூற்று, சிங்கள-பௌத்தகருத்தியலின் நிறைவேற்று எந்திரமாகிய அரசையும் அதன் வன்முறைக் கருவிகளான முப்படைகளையும் பொறுப்புக்கூறலில் இருந்து விடுவித்து, அரச கட்டமைப்புக்கு வெளியில் உள்ள சில பௌத்த துறவிகள், அமைப்புகள்என்பவற்றை மட்டும் அதனுடன் பிணைக்கிறது. இது மிகவும் பாரதூரமான ஒரு அரசியல் சதியாகும்.

கூட்டாக கையெழுத்திடப்பட்ட இமயமலைப் பிரகடனத்திற்குப் பின்னதாக வெளியிடப்பட்ட உலகத் தமிழர் பேரவை - சிறப்பான இலங்கையைநோக்கியசங்கஒன்றியத்தினரின் கூட்டறிக்கை, உலகத் தமிழர்பேரவையின்குரலாகமட்டுமே வெளிப்படுகிறது. தேவையான, மிகக் குறைந்த அளவிலான நல்லெண்ண சமிக்ஞையை வழங்கப் பொருத்தமான ஒரு சந்தர்ப்பத்திலும்கூட சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியம் (ளுடீளுடு) மௌனம் காக்கிறது.

சிங்களபௌத்தமேலாண்மைக் கருத்தியலாலும் அதன் அரசியல் திட்டங்களாலும்இதுவரைவிளைந்த பேரழிவுகள் குறித்த ஏற்றுக் கொள்ளுகையோ, சிறுவருத்தமோ கூட்டு அறிக்கையில் சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியத்தின் குரலாக வெளிப்படுத்தப்படவில்லை.

அதேபோல், பிரகடனம் கையெழுத்திடப்பட்ட காலத்திலும் அதன் பின்னரும், அதாவது சமகாலத்தில் சிங்கள பௌத்த பீடங்களின் தலைமையால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொல்லியல்சார்ந்தசெயற்றிட்டங்கள், குருந்தூர் மலை விவகாரம், மயிலத்தமடு விவகாரம் என்பவை குறித்தும் கனத்த மௌனத்தை சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியம் கடைப்பிடிக்கிறது.

இதற்குச் சமதையாக, இவ்வுரையாடல் முயற்சியைத் தொடங்கும்பொழுது, தமிழ்மக்களின் மத்தியில்எரியும்பிரச்சினைகளாகத் தொடர்ந்துகொண்டிருக்கும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர்விவகாரம், அரசியற் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தொடர் பிரயோகம், நினைவு கூர்தலுக்கான உரிமை மறுப்பு என்பவைதொடர்பாக, மறுதரப்பினர் வழங்கக் கூடிய நல்லெண்ண சமிக்ஞைகள் தொடர்பான எந்தக் குறிப்புகளையும் உலகத் தமிழர் பேரவை சுட்டிக் காட்டவில்லை.

போர்நிகழ்ந்தகாலத்திலும்அதன் பின்னரானஇப்பதினைந்துஆண்டுக் காலத்திலும் அழிவுகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் ஆட்பட்டவாறு தமது வாழ்வைத் தாயக மக்கள் தொடர்கின்றனர். அவர்களுக்காக குரல் கொடுக்கவும் தீர்வுக்கான வசதிப்படுத்தல்களை மேற்கொள்ளவும் அனைவருக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. பல புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அவற்றைமிகவும்நேர்மையாகவும், நேர்த்தியாகவும் மேற்கொண்டு வருகின்றன.

ஆனால், தாயகத்தில் வாழும் மக்களின் சார்பில்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கருத்துக்கு மனித உரிமைகள் முன்னாள் ஆணையர் எதிர்ப்பு

## அம்பிகா சற்குணநாதன் கூறுகிறார்



சட்டவிரோத படுகொலைகளே போதைப்பொருள் கடத்தலைக் கையாள்வதற்கு அரசாங்கம் கொண்டிருக்கும் உத்தி என டிரான் அலஸ் கூறியிருக்கும் நிலையில், அது 'அரச கொள்கைக்கு' நிகரானதாகும் என சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தின் உறுப்பினரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி, அரசின் இவ்வாறான செயற்பாடுகளே தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு நாட்டில் வேரூன்றுவதற்குக் காரணமாக அமைந்திருப்பதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் பாதாளக்குழுவினரின் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும் எனவும், இல்லாவிடின் அவர்களை விட்டுவைக்கப்போவதில்லை எனவும் எச்சரித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் வெளியிட்டிருக்கும் கருத்து மனித உரிமைகள் ஆர்வலர்கள் மத்தியில் கடும் விமர்சனங்களைத் தோற்றுவித்திருக்கின்றது.

போதைப்பொருள் விற்பனை செய்பவர்களுக்கும், பாதாளக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கும் நான் ஒன்றைக் கூறிக்கொள்கின்றேன். தயவுசெய்து இதனை நிறுத்திக்கொள்ளுங்கள். சண்டியர்கள் போல் இருப்பவர்கள் ஒருநாள் மரணிப்பார்கள். இத்தகைய செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால், நாம் அவர்களைத் தேடிவருவோம். அவர்கள் ஒருவரையும் விட்டுவைக்கவேண்டாம் எனக் கூறியுள்ளேன் என்று அமைச்சர் டிரான் அலஸ் எச்சரித்திருக்கின்றார்.

ஏற்கனவே நாட்டில் இடம்பெற்றுவரும் பொலிஸ்காவலின் கீழான சித்திரவதைகள் மற்றும் பொலிஸாரால் நிகழ்த்தப்படும் சட்டவிரோத படுகொலைகள் என்பன தொடர்பில் மனித உரிமை ஆர்வலர்கள் கரிசனைகளை வெளிப்படுத்திவரும் பின்னணியில், அமைச்சர் டிரான் அலஸின் கருத்து தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் (ருவிட்டர்) செய்திருக்கும் பதிவிலேயே அம்பிகா சற்குணநாதன் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார். அவர் அப்பதிவில் மேலும் கூறியிருப்பதாவது –

போதைப்பொருள் வர்த்தகர்கள் பொலிஸாரால் சட்டவிரோதமாகக் கொல்லப்படுவர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அறிவித்திருக்கின்றார். போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிராக 'உச்சபட்ச அளவில் பாதுகாப்புத்தரப்பினரை' பயன்படுத்துமாறு தான் பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருப்பதாக அவர் முதலில் கூறினார்.

அதுமாத்திரமன்றி 'நீங்கள் (போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் பாதாளக் குழுவினர்) பொலிஸாரால் அல்லது உங்களது எதிரியால் கொல்லப்படுவீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நாங்கள் அவர்களை அடையாளங்காண்போம். அதன்பின்னர் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு, அவர்கள் கொல்லப்படுவார்கள். அதனைத் தடுக்கமுடியாது' எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்திருக்கின்றார்.

சட்டவிரோத படுகொலைகளே போதைப்பொருள் கடத்தலைக் கையாள்வதற்கு அரசாங்கம் கொண்டிருக்கும் உத்தி என டிரான் அலஸ் அறிவித்திருக்கும் நிலையில், அது 'அரச கொள்கைக்கு' நிகரானதாகும். அரசின் இவ்வாறான செயற்பாடுகளும், மனித உரிமைகள் மீறப்படல் மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் புறந்தள்ளல் ஆகியவற்றுக்கு இடமளிக்கப்பட்டிருப்பதும் இலங்கையில் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு வேரூன்றுவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன என அவர் அந்தப் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# அடுத்த 5 வருடங்களில் நாடு கடன் நெருக்கடியில்

## ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த சிவில் சமூகக் கூட்டமைப்பு எச்சரிக்கை

நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அரச மற்றும் ஊழல் எதிர்ப்பு மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகும்.

இம்மறுசீரமைப்புக்களுக்கு உரியவாறான முக்கியத்துவம் வழங்கப்படாவிடின், அடுத்த 5 ஆண்டுகளில் இலங்கை மீண்டும் கடன்நெருக்கடியில் சிக்கிக்கொள்ளக்கூடிய அபாயம் காணப்படுவதாக 6 அமைப்புக்களை உள்ளடக்கிய 'பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த சிவில் சமூகக் கூட்டமைப்பு' எச்சரித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஊழல் எதிர்ப்புசார் மறுசீரமைப்புக்களில் நிலவும் முன்னேற்றமின்மை குறித்து ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெனல் ஸ்ரீலங்கா, வெரிட்டே ரிசேர்ச், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திரமானதும்நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு, சர்வவோதயம் மற்றும் தேசிய சமாதானப்பேரவை ஆகிய 6 அமைப்புக்கள்அடங்கிய'பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த சிவில் சமூகக் கூட்டமைப்பு' வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்கூறப்பட்டிருப்பவைவருமாறு–

நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அரச மற்றும் ஊழல் எதிர்ப்பு மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகும். இம்மறுசீரமைப்புக்களுக்கு உரியவாறான முக்கியத்துவம் வழங்கப்படாவிடின், அடுத்த 5 ஆண்டுகளில் இலங்கை மீண்டும் கடன்நெருக்கடியில் சிக்கிக்கொள்ளக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு யோசனைகளைப் பெரிதும் வரவேற்கின்றோம். இருப்பினும்அதில்குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலுக்கு எதிரான முக்கிய நடவடிக்கைகள் போன்றவற்றைக்கூட அரசாங்கம் இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.

புதிதாக நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்புச்சட்ட அமுலாக்கம் உள்ளடங்கலாக ஏற்கனவே இணங்கப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதிலும், அவற்றை உரியவாறு கட்டமைப்பதிலும் அரசாங்கம் மிக மந்தகரமாக செயற்படுவதாகவும், அவை முழுமையடையாமல் இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் அண்மையகாலங்களில் அரசாங்கம் சில தீர்க்கமான முடிவுகளை எடுத்துவருகின்றது. அதனடிப்படையில் ஊழலை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான செயற்திட்டங்களை புறக்கணிக்கும் அணுகுமுறையை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றுள்ள சிறைக் கைதிகள் பொலிஸாரால் கைது



அம்பாந்தோட்டை – அகுணகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் சிகிச்சைக்காகவைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்ட இரண்டு சிறைச்சாலை கைதிகள் பொலிஸாரிடமிருந்து தப்பிச்சென்று தலைமறைவாகி இருந்த நிலையில் தனமல்வில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அம்பாந்தோட்டை–வலஸ்முல்லை பிரதேசத்தை சேர்ந்த 30 மற்றும் 32 வயதுடையவர்களாவர்.

இவர்கள் இருவரும் வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டபோது பொலிஸ் பாதுகாப்பிலிருந்து கைவிலங்குகளுடன் தப்பிச் சென்று தனமல்வில பிரதேசத்தில் உள்ள தோட்டம் ஒன்றில் தலைமறைவாகி இருந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள்பல்வேறு குற்றசெயல்கள் தொடர்பில்கைதுசெய்யப்பட்டுவிளக்கமறையில் வைக்கப்பட்டிருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# கடற்படை முகாமில் சித்திரவதை பொலிஸ் அதிகாரி கைதாகினார்

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்தவுடன் ஒரு நபரை கடத்தி அவரை இரகசிய கடற்படை முகாம் ஒன்றில் சட்டவிரோதமாகத் தடுத்து வைத்து சித்திரவதை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

13 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கடத்தல் சம்பவம் தொடர்பில் மீரிகம பொலிஸ் நிர்வாகப் பிரிவின் பொறுப்பதிகாரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் அண்மையில் கைது செய்யப்பட்டார் என உயர் பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள்காட்டி சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனேரலாலகே சாந்த சமரவீர என்பவரை 2010 ஜூலை மாதம் பொலிஸ் பரிசோதகர் சமன் குமார திஸநாயக்க கடத்தி சட்டவிரோதமாகத் தடுத்து வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

காணாமல் போன சமரவீர கடைசியாக, திருகோணமலையில்கடற்படைபுலனாய்வாளர்களால் நடத்தப்படும் அடர்ந்த காடுகள் பரந்த மலைகளில் அமைந்துள்ள ஓர் இரகசிய தடுப்பு முகாமில் மறைத்து வைக்கப்பட்டிருந்தார் எனக் கடந்த 2019 ஆம் ஆண்டு உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயல்திட்டம் அறிக்கை ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியிருந்தது.

யுத்தத்தின் இறுதிகாலப் பகுதியில், கொழும்பு மற்றும் அதன் புறநகரிலிருந்து 11 பேர் கடத்தப்பட்ட வழக்குத் தொடர்பில் கவனம் செலுத்திய அந்த அறிக்கை, அவர்கள் காணாமல் போவதற்கு முன்னர்–கன்சைட் தடுப்பு முகாம்–அல்லது 'கோட்டா முகாம்' என்ற இடத்தில் கடற்படையால் கைது செய்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கு நம்பத்தகுந்த சான்றுகள் உள்ளன என்று விவரித்திருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணை, பாதிக்கப்பட்டவர்களின் நேரடி சாட்சியங்கள் மற்றும் உள்ளக தகவல்கள், நீதிமன்ற ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கன்சைட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் குறித்த விவரங்கள் வெளியாகின. அதில் ஒருவர் கேகாலை எக்கிரியாகலவைச் சேர்ந்த சாந்த சமரவீர மற்றொருவர் குருநாகல் இப்பாகமுவப் பகுதியைச் சேர்ந்த நிசாலன்சல விதாரணராட்சி.

அதே கன்சைட் முகாமில் கடற்படை புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்படும் ஒரு நபரான பஸ்நாயக்க முதலியன்சலாகே விஜயகாந்த், அங்கு ஒரு வருடம் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, இந்த இருவரும் தன்னுடன் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தனர் என குற்றப்பிரிவு விசாரணைப் பிரிவினரிடம் நீண்ட காலத்திற்கு முன்னரே தெரிவித்துள்ளனர்.

எனினும், இலங்கை பொலிஸார் எந்த சந்தேகநபரை இதுவரை கைது செய்யவில்லை.

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடரில் பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கும் இடையே இருக்கும் அபாயகரமான தொடர்பை பொலிஸாரே வெளிப்படுத்துவதற்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பமாக இருக்கும்.

எனினும், இப்படியான தொடர்பு குறித்து அதிகாரிகள் வாய் திறக்கவில்லை.

உண்மை மற்றும் நீதி செயற்றிட்டத்தின் 'இலங்கை கடற்படை: கூட்டாகக் கண் மூடி மெளனம்' அறிக்கையில் , ஆள்களைக் கடத்தி கப்பம் பெறும் திட்டமிட்ட நடவடிக்கையில் பொலிஸும் கடற்படையின் கூட்டுச் சதி இருந்திருக்கக் கூடும் சாத்தியத்தையும் ஆராய்ந்தது.

2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் சாந்த சமரவீரவின் மூத்த சகோதரி லலிதா ஜயசிங்க தனது சகோதரர் காணாமல் போனமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார். அவர் 22 ஜூலை 2010 அன்று அலவ்வ பொலிஸால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரது குடும்பத்தார் 25ஆம் திகதி–ஞாயிற்றுக்கிழமை–சட்டத்தரணி சூல சஞ்சீவ அதிகாரியுடன் பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் செய்திருந்தனர். ஆரம்பத்தில் சாந்தவை தாங்கள் தடுத்து வைக்கவில்லை என்று மறுத்தனர், எனினும் சட்டத்தரணி தலையிட்டவுடன் அவரை முன்நிறுத்தினர்.

பின்னர் லலிதா ஜயசிங்கவிடம் அவரது சகோதரர் திங்கள்கிழமையன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார் என பொலிஸார் கூறினர்.

ஆனால், துரதிஷ்ட வசமாக அது நடைபெறவில்லை.

''பின்னர் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என எமக்கு ஒரு செய்தி கிடைத்தது. பின்னர் நாங்கள் அங்குசென்ற போது, எனது சகோதரர் கழிப்பறையில் இருந்த ஜன்னல் மூலம் தப்பித்தார் என அவர்கள் கூறினர். அவர் ஜூலை 28ஆம் திகதி நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவாரா என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்தோம். அவர் பொலிஸ் நிலையத்திலும் இல்லை அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தப்படவும் இல்லை.

அநாதரவான நிலையில் லலிதா ஜயசிங்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவியை நாடினார்.

'விசாரிப்பதற்காக நாங்கள் பல முறை அந்த ஆணைக்குழுவிற்குச் சென்றோம். ஒவ்வொரு முறையும் அவர்கள் பொலிஸாருக்கு சார்பாகவே நடந்துகொண்டனர்.'

சாந்த சமரவீர காணாமல் போனமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையை மேற்கொண்டதாக அறிக்கை எதுவும் வெளியாகியிருக்கவில்லை.

கடந்த 2008-09 ஆண்டுகளில் கடத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 11 பேர் கன்சைட்டில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பில், இலங்கையில் மிகவும் மதிப்பளிக்கப்பட்ட கடற்படைத் தளபதியான வசந்த ஜயதேவ கரணாகொட ஒரு முக்கிய சந்தேகநபராக உள்ளார்.

கடந்த 2021இல், இலங்கையில் மேல்முறையீட்டு நீதிமன்றம் அவருக்கு எதிரான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதற்கு இடைக்கால உத்தரவு ஒன்றை பிறப்பித்தது.

கன்சைட் முகாமில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரி கடந்த 2019 ஆம் ஆண்டு நாட்டிலிருந்து தப்பித்து வெளியேறினார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பரந்துபட்ட கலந்துரையாடல் அவசியம்

சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் என்கிற பிக்குகள் அமைப்பும் உலகத் தமிழர் பேரவையும் இணைந்து நடத்திய கலந்துரையாடல்களைத்தொடர்ந்து அண்மையில் இமயமலைப் பிரடகனம் ஒன்றை வெளியிட்டன. நோபாளம் நாட்டில் இந்த இரு அமைப்புக்களும் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படைக் கருத்தியலைக் கொண்ட ஒரு வரைவு இது என அறிவிக்கப்பட்டது.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு மூல காரணமாக இருக்கும் காரணிகளில் முதன்மையான ஒன்று சிங்கள பௌத்த பேரினவாதக் கருத்தியல். எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு பிக்குகள் அமைப்புகளுடன், குறிப்பாக இலங்கையில் உள்ள மிக முக்கியமான நான்கு பௌத்த பீடங்களுடன் ஒரு இணக்கப்பாட்டை எட்டுவது அவசியம் என்கிற கருத்தை மறுக்க முடியாது. அதனடிப்படையில் மகா சங்கங்களை அணுகக்கூடிய விதத்தில் ஒரு பிக்கு அமைப்புடன் பேச்சுக்கள் நடத்தி, கலந்துரையாடல்களை முன்னெடுக்க எடுக்கப்பட்ட முயற்சி வரவேற்கத்தக்கது. ஆனால், மறுபுறத்தில் அந்த முயற்சியை எடுத்தவர்கள் யார் என்பதே இப்போது எழுந்துள்ள பிரச்சினை.

ஈழத் தமிழர்களில் தாயகத்தில் உள்ள தமிழர்களின் பிரச்சினைகளுக்காகப் புலம்பெயர் தமிழர் அமைப்பு ஒன்று தான்தோன்றித்தனமாக, தயாகத்தில் உள்ள எவரையும் கலந்தாலோசிக்காமல், தன்னியாக ஒரு பேச்சை நடத்தி அதனடிப்படையில் ஒரு பிரகடனத்தையும் வெளியிட்டமை ஏற்புடையதல்ல என்பதை இந்தப் பத்தியில் ஏற்கனவே ஒரு தடவை சுட்டிக்காட்டியிருக்கின்றோம். அதை வழிமொழியும் வகையில் தயாகத்தில் இருந்து இந்த இமயமலைப் பிரகடனத்திற்குக் கணிசமான எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. பல படித்தவர்களும் பொது அமைப்புக்கள் பலவும் இந்தப் பிரகடனத்தை எதிர்த்தும் நிராகரித்தும் அறிக்கைகளை விடுத்துள்ளன. புலம்பெயர் அமைப்புக்களும்கூட இந்தப் பிரகடனத்தை எதிர்த்துள்ளன.

ஈழத் தமிழர் பிரச்சினையில் தீர்மானகரமான சக்திகள் தயாகத்தில் உள்ள தமிழர்கள் மட்டுமே. எந்தவகையிலான தீர்வாக இருந்தாலும் அதனை அவர்களே கண்டடைந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படியில்லாத எந்தவொரு தீர்வும் பயனற்றது. விழலுக்கு இறைக்கப்படும் நீர். அதேபோன்று பௌத்த மகா சங்கங்களின் ஆசியும் இணக்கமும் அற்ற எந்தவொரு தீர்வும் இலங்கைத் தீவுக்குள் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதிலும் அரிது. எனவே தீர்வு முயற்சிகளை சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து தொடங்குவதற்குப் பதில் பிக்களிடம் இருந்தும் பௌத்த பீடங்களிடம் இருந்தும் தொடங்குவதே சாலப் பொருத்தம்.

அந்த வகையில் இமயமலைப் பிரகடனம் அதன் அணுகுமுறையில் பாதி சரியானது. பாதி ஏற்புடையதே அல்ல. பிரகடனத்தின் உள்ளடக்கம் குறித்துத் தமிழர் தரப்பில் இப்போது பல குறைபாடுகள், கண்டனங்கள் எழுப்பப்படுகின்றன. அது தாயகத்தில் உள்ள தமிழர்களுடன் கலந்துரையாடப்படாததன் காரணமாக ஏற்பட்டுள்ள நிலை. அதனாலேயே தாயகத்தில் இருந்து பிரகடனத்தைப் பலரும் பல அமைப்புக்களும் முற்றாக நிராகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கட்டத்தில், இந்த முயற்சியை ஆக்கபூர்வமானதாக மாற்றுவதற்கான வழிவகைகள் நாடப்படவேண்டும். அதிலொன்று பிக்களுக்கும் மகாசங்கங்களுக்கும் தமிழர் தரப்பினருக்கும் இடையிலான பேச்சக்களை, கலந்துரையாடல்களை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளைத் உலகத் தமிழர் பேரவை முன்னெடுப்பதே பொருத்தமானதாக இருக்கும். சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் நேரடியாகப் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதே நீடித்த நிலையான அமைதிக்கான வழியாக இருக்கும். சரியாகப் போடப்பட்டுள்ள தொடக்கப்புள்ளியிலிருந்து இனியாவது சரியான கோலத்தைப் போடுவதற்கான முயற்சிகள் தொடங்கப்படவேண்டும்.

அதற்கு முதலில் இங்குள்ள அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், புலமையாளர்களை உள்ளடக்கிய கலந்துரையாடல்களை நடத்தவேண்டும். பின்னர் அந்தக் கலந்துரையாடல்கள் பிக்குகளுடனானதாக வளர்த்துச் செல்லப்படவேண்டும். போர்க் காலத்தில் தலைவர் பிரபாகரனை நேரில் சென்று பார்த்துப் பேசுவதற்குத் தயாராக இருந்த மல்வத்து பீடாதிபதியைப் போன்றவர்கள் தமிழர்களுடன் கலந்துரையாடல்களை நடத்த மறுப்பார்கள் என்று எண்ணத் தோன்றவில்லை. எனவே அவர்களையும் தயாகத்திலுள்ள தமிழர்களையும் நெருக்கமான கலந்துரையாடல்களுக்கு அழைத்து வருவதே இந்த முயற்சியை பயனுள்ளதாக்கும்.



# நாடாளுமன்றத்தின் அதிகாரம் எதுவரை?

உபுல் யோசப் பெர்னான்டோ



இலங்கை நாடாளுமன்றத்தால் ஆணை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதுதான் செய்ய முடியாத ஒரே காரியம் என்று கூறப்பட்டது. இருப்பினும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான கிரிக்கெட் நிர்வாகத்தை வீட்டுக்கு அனுப்ப நாடாளுமன்றம் தவறிவிட்டது.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி அந்த பதவிக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டவரில்லை. மாறாக 134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டு அதிகாரத்தைப் பிடித்தவர். 134 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தால்தான் இலங்கையில் நாடாளுமன்றத்தால் நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்ய முடியும்.

1964ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி அப்போதைய பிரதமர் சிறீமாவோ பண்டாரகாயக்கவை வீட்டுக்கு அனுப்பினார்கள். இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதி ஒருவரை நாடாளுமன்றத்தால் பதவி நீக்கம் செய்து வீட்டுக்கு அனுப்ப முடியும். இது மக்கள் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு மட்டுமல்ல; நாடாளுமன்றத்தால் தெரிவு செய் யப்பட்ட ஜனாதிபதிக்கும் பொருந்தும்.

அதேபோல், நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் வீட்டுக்கு அனுப்ப முடியும். 1980ஆம் ஆண்டு ஜே.ஆர். ஆட்சி நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து சிறீமாவோ பண்டாரநாயக்கவை பதவி நீக்கியது. அவரது குடியுரிமை நீக்கப்பட்டது மட்டுமின்றி, அவர் தனது வாக்குரிமையைப் பயன்படுத்துவதைத் தடுத்து, ஏழு ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடவும் தடை விதித்தது.

2012இல் இலங்கை நாடாளுமன்றம் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை வீட்டுக்கு அனுப்பியது. இலங்கையில் பிரதம நீதியரசர் ஒருவரை நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே பதவி நீக்கம் செய்யமுடியும்.

1972இல், இலங்கை ஒரு குடியரசாகிய அரசமைப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், சிறீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சி, பிரித்தானிய ராணியின் எச்ச சொச்சங்களை உடனடியாக வெளியேறுமாறு கூறியது. நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு சக்தியால், இங்கிலாந்து கிரீடத்தின் சக்தி இலங்கையிலிருந்து அகற்றப்பட்டது.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர். ஆட்சி நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பை நிறைவேற்றி அப்போதைய பிரதமரை ஜனாதிபதியாக நியமித்தது. ஜனாதிபதியானதும் ஜே.ஆர். சொன்னது, இப்போது நாடாளுமன்றத்தால் ஒரு பெண்ணை ஆணாகவும், ஆணைப் பெண்ணாகவும் மாற்ற முடியாது என்பதே.

அதற்கு முன்னர், ஆளும் தரப்பு ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மையைக் கொண்ட நாடாளுமன்றத்தால் பெண்ணை ஆணாக பெண்ணாக மாற்றுவதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியும் என்றும் இதே ஜே.ஆர்தான் கூறியிருந்தார்.

2015ஆம் ஆண்டு மைத்திரி ஜனாதிபதியாக பதவியேற்றதுடன் நாடாளுமன்றத்தில் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவந்து ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றைப் பிரதமருக்கு மாற்றினார்.

2019ஆம் ஆண்டு கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் பிரதமருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பெற்றுக்கொண்டார்.

இவையனைத்தும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவைக் கொண்டிருந்த ஆளுத்தரப்பால் மேற்கொள்ளப்பட்டது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவது என்பது எளிதல்ல. 2011இல், மகிந்த, மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளின் மூலம், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் தான் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏற்ற வகையில் அரசமைப்பை மாற்றினார்.

மைத்திரி 2015 ஜனாதிபதியாகியதும் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றினார். இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு இழுக்கப்படுவார்கள் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தி மைத்திரிக அதனை நிறைவேற்றினார். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தனக்கு ஆதரவாகத் திருப்பி மீண்டும் நிறைவேற்று அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

இருந்த போதிலும், நாடாளுமன்றத்தின் மொத்தமுள்ள 225 பேரும் கூடி அண்மையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய போதும் அதனை நடைமுறைப் படுத்த முடியவில்லை.. கிரிக்கெட் சபையின் ம்மி சில்வா தலைமையிலான நிர்வாகத்தை வீட்டுக்கு அனுப்பும் தீர்மானம் அது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் இலங்கை நாடாளுமன்றத்தால் மீண்டும் 21ஆவது திருத்தமாக நிறைவேற்றப்பட்டபோதும்கூட அனைவரும் ஒன்றிணைந்திருந்தனர். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எதிர்த்து வாக்களித்ததால் 225 பேரும் இணைந்து நிறைவேற்றிய தீர்மானம் என்ற பெருமையை அது பெறவில்லை. ஆனால் 225 பேரும் சேர்ந்து கிரிக்கெட் வாரியத்தை வீட்டுக்கு அனுப்ப தீர்மானம் நிறைவேற்றினர்.

அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் ரொான் ரணசிங்க இந்த யோசனையை முன்மொழிந்தார். தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறுநாள் ஷம்மி சில்வா ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் ஜெய் ாவிடம் பேசினார். அதன் பின்னர் ஷம்மி சில்வா ரணிலை சந்தித்ததார் என்ற ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அதன் பின்னரே ரணில் ஜெய் ாவுடன் பேசியதாக புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட்டை தடை செய்யுமாறு கிரிக்கெட் சபையின் தலைவர் கடிதம் எழுதினார் என்ற உண்மையை சஜித் நாடாளுமன்றத்தில் (5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# சரியானவர்கள் நாட்டைப் பொறுப்பேற்று முன்நோக்கி கொண்டு செல்லவேண்டும்

## றொஷான் ரணசிங்க சுட்டிக்காட்டு



ஸ்ரீலங்கா கிரிக்கெட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரை தீர்வு காண முடியாது என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே முதலில் ஊழல் மற்றும் மோசடிகாரர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் எனவும் எதிர்காலத்தில் சரியானவர்கள் நாட்டைப் பொறுப்பேற்று முன்னோக்கி கொண்டுசெல்ல வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் றொான் ரணசிங்க ருக்மலை தர்ம விஜயராம விகாரைக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் இதன்போது சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாட்டில் திறமையான கிரிக்கெட் அணி ஒன்றே உள்ளது. கடந்த வருடம் எம்மால் ஒருநாள் மற்றும் 20 இருபது போட்டிகளில் சாதிக்க முடிந்தது. ஆசிய கிண்ண போட்டிகளில் கிண்ணத்தை கொண்டு வர முடிந்தது. இவையெல்லாம் நான் பொறுப்பில் இருந்த போது கிடைத்த வெற்றிகள். என்னிடமிருந்து பொறுப்புக்கள் பறிக்கப்பட்டன. அதன் பின்னர் பல தோல்விகளை சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

முன்னாள் வீரர்களான குமார் தர்மசேன மற்றும் முத்தையா முரளிதரனும் இலங்கை கிரிக்கெட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது எனக் கூறினார்கள்.

இன்று நானும் அதனையே கூறுகிறேன். இருப்பினும் முன்னதாக என்னால் முடியும் எனக் கூறியே சவால்களை ஏற்று பொறுப்புகளை பெற்றுக் கொண்டேன்.

ஆனால் தற்போது என்ன நடந்துள்ளது? முரளிதரன் கூறியதும் சரியே. அடுத்த ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரையில் கிரிக்கெட்டுக்குள் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

தேர்தலின் போது ஊழல் மோசடி தொடர்பில் தெளிவான கொள்கைகளை முன்வைக்க வேண்டும். அவை வெறும் வாக்குறுதிகளாக மாத்திரம் இருக்கக்கூடாது.

நல்லாட்சி அரசாங்கம் என கூறிக் கொண்டு மத்திய வங்கியை கொள்ளையடித்து சென்றதை போன்று இருக்கக்கூடாது. இந்த முறையும் இதுவே நடந்தது.

ஹரின் பெர்னாண்டோ போன்றவர்கள் காலி முகத்திடலில் சென்று ஊழல் மோசடிக்காரர்கள் தொடர்பில் கூச்சலிட்டார்கள். ஆனால் இறுதியில் என்ன நடந்தது. அவர்கள் ஊழல் மோசடிகாரர்களை சட்டரீதியாகப் பாதுகாக்கின்றனர். நாட்டின் ஆட்சி சர்வதேச நாணய நிதியத்திடமே இருக்கிறது. அவர்களின் நிபந்தனைக்கு அமையவே வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு வரியை சுமத்தும் போது ஊழல் மோசடி இடம்பெறுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. நிலக்கரி,எரிபொருள் கொள்வனவின் போது ஊழல்,மோசடி இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதியே கூறுகிறார்.

அப்படி என்றால் அரசாங்கம் ஒன்று தேவையில்லை அல்லவா? இவர்களைத் தேடி தண்டனை வழங்க வேண்டும். தேர்தல் நெருங்கும் போது காய் நகர்த்துவார்கள். எனவே சரியானவர்கள் பொறுப்பேற்று நாட்டை கொண்டு செல்லவேண்டும். - என்றார். (05)

# நாடாளுமன்றத்தின்........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

காலம் எடுக்கவில்லை. விளையாட்டுத்துறை அமைச்சர் றொானை நீக்கிவிட்டு ஹரீனை விளையாட்டுத்துறை அமைச்சராக்கினார் ரணில். தற்போது முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் றொான் நியமித்த இடைக்கால குழுவை வர்த்தமானி மூலம் ஹரின் ரத்து செய்துள்ளார். றொான் வர்த்தமானி மூலம் இடைக்கால குழுவை நியமித்த போது, றொான் இடைக்கால குழுவை நியமிப்பதற்கு முன்னர் அமைச்சரவைக்கு அறிவித்திருக்க வேண்டும் என ரணில் தெரிவித்தார்.

றொானின் இடைக்கால குழுவை ரத்து செய்வதற்கு முன்னர் ஹரின் அமைச்சரவைக்கு அறிவித்தாரா...?'

இந்த அமைச்சரவையில் கிரிக்கெட் வாரியம் கலைக்கப்படவேண்டும் என்ற பிரேரணைக்கு கை ஓங்கிய அமைச்சர்களே உள்ளனர். சஜித் இந்த யோசனையை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். அதனை நிமல் சிறிபால டி சில்வா அங்கீகரித்தார்.

அந்த இடைக்கால குழுவில் விஜயதாசவின் மகன் ரகித ராஜபக்ஷவும் இருந்தார். பிரசன்ன ரணதுங்கவின் சகோதரர் அர்ஜுன ரணதுங்க இதன் தலைவராக இருந்தார்.

ஹரீன் இடைக்காலக் குழுவை இரத்துச் செய்யும்போது தினேஷ், நிமல், அர்ஜுன, விஜயதாச எங்கே இருந்தார்கள்...? எவருமறியார்! ஆனால் இன்று 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கிரிக்கெட் வாரியம் நகைச்சுவையாக்கியுள்ளது.

'ஜனாதிபதிகள், தலைமை நீதிபதிகள் மற்றும் பிரதமர்களை விரட்டி அடிக்கலாம். பெண்ணை ஆணாகவும், ஆணை பெண்ணாகவும் ஆக்குவதை தவிர வேறு எதையும் செய்யலாம். ஆனால் உங்களால் எங்களை விரட்ட முடியாது..."

இப்படித்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் நாடாளுமன்றத்தை நோக்கி கிண்டல் அடித்தது.

ஹரீனை விளையாட்டுத்துறை அமைச்சராக நியமித்து கிரிக்கெட் சபையை பாதுகாத்ததன் மூலம் றொான் ரணசிங்கவுக்கும் சஜித்துக்கும் மட்டுமன்றி கிரிக்கெட் சபையை அகற்றுவதற்கு வாக்களித்த அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ரணில் கசப்பான பாடம் புகட்டினார்.

உள்ளாட்சி தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி நீண்ட நாட்களாகி விட்டது. அந்த முடிவையும் மீறி தேர்தல் ஆணையாளரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு புதிய தேர்தல் ஆணையாளரை ரணில் நியமித்தார். நீதிமன்ற தீர்ப்பால் எதுவும் நடக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் கிரிக்கெட் வாரியத்தை வீட்டுக்கு அனுப்ப கையை உயர்த்தினார்கள். அந்த பிரேரணையை மீறி ரணில் விளையாட்டுத்துறை அமைச்சரை மாற்றி மற்றுமொரு விளையாட்டுத்துறை அமைச்சரை நியமித்தார்.

இலங்கையில் கிரிக்கெட் தடை செய்யப்பட்டதன் பின்னணியில் இயங்கியது சர்வதேச கிரிக்கெட் பேரவையல்ல, ரணிலுக்கும் றொான் ரணசிங்கவுக்கும் இடையிலான பிரச்சினையே காரணம். ரணில் நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் தலையிட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் றொானை இந்திய கிரிக்கெட் சபையின் தலைவருடன் கலந்துரையாட அனுமதித்திருந்தால் கிரிக்கெட் சபை வெகுநாட்களுக்கு முன்னரே வீட்டிற்கு சென்றிருக்கும்.

ஆசிய கிரிக்கெட் கவுன்சிலில் விளையாட்டுத்துறை அமைச்சரைப் பேச விடாமல் இலங்கைக் கிரிக்கெட் தடுத்தது. 2023ஆம் ஆண்டு ரணில் மற்றும் ஹரீன் ஆகியோர் கிரிக்கெட் வாரியத் தலைவர் ம்மியுடன் றொான் ரணசிங்கவைத் தவிர்த்துவிட்டு ஒரு போட்டிக்குச் சென்றனர். அப்போதுதான் றொானை உதைக்கும் ஆட்டம் தொடங்கியது. விளையாட்டுத்துறை அமைச்சர் றொானை அந்நாட்டு ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள மாட்டார் என்ற செய்தி ஆசிய கிரிக்கெட் சபைக்கு சென்றது அன்றுதான்.

நாடாளுமன்றத்தின் ஆறில் ஐந்தில் பங்கு பெரும்பான்மை அதிகாரத்தினால் பெண்ணை ஆணாகவோ, ஆணை பெண்ணாகவோ மாற்றுவதைத் தவிர வேறு எதுவும் சாத்தியமாகும் என ஜே.ஆர் குறிப்பிட்டார். ஜே.ஆரின் மருமகன் ரணில், 225 பேரும் தயாராக இருந்தும், கிரிக்கெட் வாரியத்தைக்கூட நாடாளுமன்றத்தால் அகற்ற முடியாது என்பதை நிரூபித்தார்.





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# நாட்டைக் கட்டியெழுப்ப அரசு பயணிக்கும் பாதையைத் தவிர வேறு பாதை இல்லை

## வஜிர அபேவர்தன அடித்துக் கூறுகிறார்

இலங்கை எதிர்வரும் ஜனவரியில் இருந்து வங்குரோத்து நிலையில் இருந்து மீள்கிறது. இதன் மூலம் எதிர்காலத்தில் உலக நாடுகளின் உதவிகள் எமக்குக் கிடைக்கப்பெறும்.

இதற்கான அனைத்து கௌரவமும் ரணில் விக்ரமசிங்கவுக்கே சேரவேண்டும். அதனால் நாட்டைக் கட்டியெழுப்ப அரசாங்கம் பயணிக்கும் பாதையைத் தவிர வேறு பாதை இல்லை என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஆட்சியாளர்களின் பிழையான தீர்மானங்களால் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி எமது நாடு வங்குரோத்து அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக சர்வதேசத்தின் நம்பிக்கையை இழந்தோம் . எமக்கு கடன் வழங்க யாரும் முன்வரவில்லை. நாட்டில் தேசிய விழாக்கள் எவையும் இடம்பெறவில்லை. இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்க யாரும் முன்வரவில்லை. சில அரசியல் கட்சிகள் தங்களின் கட்சி பெயர் பலகையை மறைத்துக்கொண்டார்கள். அரசியல்வாதிகளுக்கு வீதியில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இந்நிலையிலேயே ரணில் விக்ரமசிங்க கடந்த வருடம் மே 12 ஆம் திகதி பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டு நாட்டை மீட்பதற்கு முன்வந்தார்.

ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளும்போது நாட்டில் எரிபொருள் இல்லை. எரிவாயு இல்லை. அத்தியாவசிய பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு. இவற்றை பெற்றுக்கொள்ள மக்கள் வரிசையில் இருக்கவேண்டிய நிலை. எரிபொருள் பௌசர் வரும்போது கை தட்டி வரவேற்கும் சமூகமே அன்று இருந்தது. இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்க அனைவரதும் ஒத்துழைப்பை அவர் கோரி வந்தார். அதன் பிரகாரமே அவர் ஜூலை 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் 134 வாக்குகளால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நாடு வங்குரோத்து அடைந்து ஒருவருடமும் 6 மாதங்களுக்குள் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு ரணில் விக்ரமசிங்கவுக்கு முடியுமாகி இருந்துள்ளது. உலகில் வங்குரோத்து அடைந்த நாடுகள் பல இருக்கின்றன. அவை இன்னும் அதில் இருந்து மீள முடியாமல் இருக்கின்றன. ஆனால் எமது நாட்டுக்கு குத்தப்பட்டிருந்த வங்குரோத்து என்ற முத்திரையை ரணில் விக்ரமசிங்க ஒருவருடம் 6 மாதங்களில் அகற்ற நடவடிக்கை எடுத்தார். இதன் காரணமாக எமது வங்கி கடன் அட்டையை ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட உலகில் இருக்கின்ற அதிகார பலமிக்க பல தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியே இந்த மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தார். அதனால் இதன் பின்னர் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்கு செல்ல இடமளிக்கக் கூடாது. அரசியல்வாதிகள் பொய் வாக்குறுதிகளை வழங்குதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தைப் பலப்படுத்தி இருக்கிறோம்.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என அனைத்து நிதி நிறுவனங்களுக்கும் வழங்கி இருக்கின்றன. அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டதாலே எமக்குக் கடன் வழங்க நாணய நிதியம் முன்வந்திருக்கிறது. இதன் மூலம் ஜனவரி முதல் அனைத்து நிதி நிறுவனங்களில் இருந்தும் எமக்கு உதவிகள் கிடைக்க ஆரம்பிக்கும். அதன் மூலம் படிப்படியாக வரி குறைப்பு செய்யவும் மின்சாரக் கட்டணங்களில் குறைப்பு செய்யவும் முடியுமாகும்.

எனவே, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கம் தற்போது செல்லும் வழியைத் தவிர வேறு வழியில்லை. எதிர்வரும் 20 வருடங்களில் இலங்கையை ஆசியாவில் முன்னணி நாடாகக் கொண்டு செல்வதே எமது இலக்காகும். - என்றார். (05)



# பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் பாக். உயர்ஸ்தானிகர் சந்திப்பு

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் தனது சேவைக் காலம் முடிந்து நாடு திரும்பும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உமர் பாரூக் புர்க்கிக்கும் இடையிலான சந்திப்பொன்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன் போது சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறிப்பாக பௌத்த யாத்ரீகர்களின் பாகிஸ்தானுக்கான விஜயங்கள் குறித்து உயர்ஸ்தானிகர் பிரதமரிடம் விளக்கினார். இலங்கையர்களுக்கு பௌத்த யாத்திரை தலங்களைத் திறக்கும் பாகிஸ்தானின் முன்மொழிவுக்குப் பாராட்டுத் தெரிவித்த பிரதமர், கடந்த ஆண்டு பௌத்த பிக்குகள் ஊடகவியலாளர்கள் மற்றும் கல்விமான்கள் பாதுகாக்கப்பட்ட பௌத்த பாரம்பரியங்களைப் பார்வையிடுவதற்காக ஒரு சுற்றுப் பயணத்தை ஏற்பாடு செய்ததற்காக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்திற்கு நன்றி தெரிவித்தார். அவ்வாறானதொரு சுற்றுலா அடுத்த ஆண்டு முன் அரைப்பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையிலும் ஏனைய சர்வதேச மன்றங்களிலும் இலங்கைக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்து வருகின்றமை மற்றும் உயர் கல்விக்காக இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்படும் பாகிஸ்தான் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளமைக்காக பாகிஸ்தான் தூதுவருக்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராயுமாறு பாகிஸ்தான் தொழில் முயற்சியாளர்களிடம் பிரதமர் கேட்டுக் கொண்டதுடன் முதலீட்டாளர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு செல்வதாக உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார். மேலும் இலங்கையில் தான் பணியாற்றிய காலத்தில் தமக்கு வழங்கிய சிறந்த ஒத்துழைப்புக்காக பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார். (05)



## இமயமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசுவதற்கும் ஒப்பந்தங்களையும் பிரகடனங்களையும் மேற்கொள்வதற்கும் தாயகத்தில் அவர்களால் அமைக்கப்படும் பரந்த 'கூட்டு முன்னணி' ஒன்றிற்கே தார்மீக உரிமை உள்ளது என்பதை மிகவும் அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகமயமாக்கப்பட்டுள்ள முதலாளித்துவ நலன்களுக்கு இசைவாக பூகோள அரசியல் ஒழுங்குகள், தேசிய அரசுகளுக்கு உட்பட்ட அரசியல் சமூக பொருளாதார ஒழுங்குகள் என்பவற்றை முன்னிறுத்தி உள்நாட்டு பிரச்சினைகளின் தன்மைகளையும், கதையாடல்களையும் மீள கட்டமைப்புச் செய்யும் சர்வதேச அரசியல் அட்டவணைக்கு ஏற்பவே இமயமலைப் பிரகடன முயற்சி நிதியீட்டம் செய்யப்பட்டு அரங்கேற்றப்படுகிறது என்பதை நாம் தெளிவாக புரிந்துள்ளோம்.

உலகங்கெணும் வாழும், அரசியல் பொருளாதார அடக்குமுறைக்கு உட்படும், நேரடியான அரச வன்முறைக்கு உட்பட்டுவரும், அரசற்ற தேசிய இனங்கள், விளிம்பு நிலை மக்கள் என பல்வேறுபட்ட தரப்பினரை குரலற்றவர்களாக மாற்றும் பெரும் கருத்தியல் மேலாதிக்கத் திட்டங்கள், குறித்து நாம் விழிப்புடன் இருக்கிறோம்.

இப்பூமியின் இருப்பையே கேள்விக்கு உள்ளாக்கும் ஒரு பொருளாதார அரசியல் முறைமையின் அரூபகரங்கள் எம்மைச் சூழ்ந்திருப்பதை நாம் அறிவோம். உலகத் தமிழர் பேரவை சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியத்தினர் வெளியிட்டுள்ள இமயமலைப் பிரகடனம் இவ்வரூப கரங்கள் பின்னும் மாய வலையின் ஒரு கண்ணிதான் என்பதும் எமக்கு தெரியும்.

அவற்றுக்குப் பொருத்தமான வகையில் எதிர்வினையாற்றக்கூடிய பரந்த அரசியல் முன்னணியை தேசிய எல்லைகளுக்கு உட்பட்டும், அதற்கு வெளியேயுள்ள புலம்பெயர் தமிழ் மக்களை உள்வாங்கியும், தாயகத்தில் வாழும் ஒடுக்கப்படும் மக்கள் உருவாக்குவர் என்பதை வெளிப்படுத்தி நிற்கிறோம்.

பல்வேறு நோக்கு நிலைகளைக் கொண்ட, பன்முகத்தன்மை கொண்ட புலம்பெயர் தமிழ் மக்களின் மத்தியில் உள்ள, பல குழுக்களில் ஒன்றான உலகத் தமிழர் பேரவைக்கும் சிங்கள பௌத்த மேலாண்மை கருத்தியலைப் பலம் மிக்க வகையில் முன்கொண்டு செல்லும் சங்க அமைப்புகளின் மத்தியில், இருக்கும் பல அமைப்புக்களில் ஒன்றான சிறப்பான இலங்கையை நோக்கிய சங்க ஒன்றியத்திற்கும் இடையிலான உரையாடல் என்ற அளவில் மட்டும் இம்முயற்சி கட்டமைக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டால், இம் முயற்சிக்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்கப் போவதில்லை. அவ்வாறன உரையாடல்கள் நிகழ்வதும் காலத்தின் தேவைதான்.

ஆனால், நீடித்து நிலைக்கக்கூடிய சமாதானத்தை அடைவதற்கு, அறத்தின் பாற்பட்டும், தர்க்கத்தின் பாற்பட்டும், நீதியின் பாற்பட்டும் அவசியமானதும் அடிப்படையானதுமான திம்புக் கோட்பாடுகளைப் புறமொதுக்கும், குயுக்தி அரசியலை முன்னெடுக்க விழையும், இமயமலைப் பிரகடனத்தின் கபட நோக்கங்களையும், திரிபுகளையும் முற்றாக நிராகரிக்கிறோம் - என்றுள்ளது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# வரி திருத்தம் பொருளாதார மறுசீரமைப்பு இன்றி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது

## ஹர்ஷ டி சில்வா கருத்து



ஐக்கியமக்கள்சக்தியின்பொருளாதாரக்குழு உறுப்பினர் என்பதற்காக பொய் கூறி மக்களை ஏமாற்ற நான் விரும்பவில்லை.

வரிதிருத்தங்கள்இன்றியோ,பொருளாதார மறுசீரமைப்புக்கள் இன்றியோ நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. அரசாங்கம் எதிர்பார்த்துள்ள வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் நாணய நிதியத்துடனான வேலைத்திட்டங்கள் முற்றாக வீழச்சியடைந்து விடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசாங்கம் எதிர்பார்த்துள்ள வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால், சர்வதேசநாணயநிதியத்துடன்எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டு வேலைத்திட்டங்கள் வீழ்ச்சியடையும்.

அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் எமக்குகைகொடுப்பதற்குயார்இருக்கின்றனர்? 2023 ஐ போன்றே, 2024 ஆம் ஆண்டும் நெருக்கடி மிக்கதாகவே இருக்கும்.

பொருளாதார மறுசீர மைப்புக்கள் இன்றி நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற கற்பனைக் கதையைக் கூறுவதற்கு நான் தயாராக இல்லை.

சீன எக்ஸிம் வங்கி, பரிஸ் கிளப் நாடுகள் மற்றும் இந்தியா என்பவற்றுடன் கடன் மறுசீரமைப்பைப் மேற்கொள்வதற்கான ஆரம்ப இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதன் மூலம், நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டின் முதற்படியைக் கடந்துள்ளோம்.

எனினும் அதற்கான ஒப்பந்தம் இதுவரை கையெழுத்திடப்படவில்லை. இந்தஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் மாத்திரமே, வர்த்தகக் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள முடியும்.

பொய் கூறி மக்களை ஏமாற்ற நினைப்பவர்கள் இது குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டும். கடந்த ஆண்டு பெறுமதி சேர் வரியின் மூலம் பெற்றுக் கொண்ட வருமானத்தை விட, இரு மடங்கு அதிக வருமானத்தை இவ்வாண்டு பெற்றுக்கொள்ள

எதிர்பார்க்கப்படுகிறது.

பூச்சியமாகக் காணப்பட்ட சில பொருள்களுக்கான வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நியாய மற்றதாகும். இதனால் குறைந்த வருமானம் பெறும் மக்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

செல்வந்தர்களுக்கானசொத்துவரியை அதிகரித்தால், சாதாரண மக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கலாம். எனினும் இதனையும் சிலர் எதிர்க்கின்றனர்.

அனைத்து வரிகளுக்கும் எதிர்ப்பை வெளியிட்டால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. தற்போது நாட்டுக்கு கிடைக்கும் வரி வருமானம் போதுமானதல்ல.

மின்கட்டணங்கள்அதிகரிக்கப்பட்டதன் பின்னர் இலங்கை மின்சாரசபை இவ்வருடம் சுமார் 60 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது. ஊழல், மோசடிகளைக் குறைத்தால் மின் கட்டணத்தைக் குறைத்து இலாபமீட்டலாம்.

டொலர் வருமானம் கிடைத்தால் மாத்திரமே முதலீட்டுக்கு இடமளிக்கப்படும் எனக் குறிப்பிடுகின்றமை முட்டாள் தனமானதாகும். அவ்வாறெனில் டயலொக் மூலம் டொலர் வருமானமா கிடைக்கின்றது? டயலொக் நிறுவனத்தின் முதலீடு முக்கியத்துவமற்றதா? அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும்.

எந்தத் தேர்தல் இடம்பெற்றாலும், மக்களுக்கு உண்மையைக் கூற வேண்டும். மறுசீரமைப்பு என்பதை முழுமையாக சொத்துக்கள் விற்கப்படுவதாகக் கருதக் கூடாது.

மறுசீரமைப்பிலுள்ள ஓர் அங்கமே விற்பனை செய்வதாகும். மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ நிறுத்திய இடத்திலிருந்து வேலைத்திட்டங்களை தொடர்ந்திருந்தால், இன்று இலங்கை பங்களாதேஷிடம் கையேந்தும் நிலைமைக்கு சென்றிருக்காது. – என்றார். (05)

# எந்தச் சவால்களையும் வெற்றிகொள்ளும் தலைமுறையாக நாம் மாறுதல்வேண்டும்

## பிரதமர் தினேஷ் 'அட்வைஸ்



மஹாபொல புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் கல்வியில் புரட்சிகரமான தாக்கத்தை ஏற்படுத்தமுடிந்துள்ளது. கல்வியையும் அறிவையும் மஹாபொலவின் நிழலில்ஒன்றிணைப்பதற்கானபுதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

சவால்களை வெற்றிகொள்வதற்கு பாரம்பரியத்தை மாற்றிபுதிய சவால்களை வெற்றிகொள்ளும் ஒரு நாட்டின் தலைமுறையாக நாம் மாற வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஜா-எல நகரசபை விளையாட்டரங்கில் நடைபெற்ற மஹாபொல கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியின்போது கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதமர் –

ஒவ்வொருதாயும்தந்தையும் தமது குழந்தையின் எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்கிறார்கள். எமது கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் உள்ள பெருந்தொகை யான பிள்ளைகளுக்கு வழங்கப்படும்மஹாபொல புலமைப்பரிசில் எதிர்காலத்தில் சிறுவர்கள் எதிர்நோக்க வேண்டிய பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் இவ்வாறான விளைவை ஏற்படுத்த முடியும்.

மஹாபொலவில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட இந்த நாட்டை கட்டியெழுப்பக்கூடிய பிள்ளைகள்இன்றும்எமதுநாட்டின் பல்வேறு நிறுவனங்களிலும் சர்வதேச ரீதியிலும் பணியாற்றி வருகின்றனர். மஹாபொல வேலைத்திட்டத்தைஅமுல்படுத்துவது எமது நாட்டின்

வளரும் தலைமுறைக்கானதாகும். மஹாபொல ஆரம்பிக்கப்பட்ட போது விரல் விட்டு எண்ணக்கூடிய பல் கலைக்கழகங்கள் குறைவாகவே இருந்தன.

இன்று நாட்டில் மூன்று முதல் நான்கு மடங்கு அரச பல்கலைக்கழகங்கள் உள்ளன. இந்த நாட்டில் இருபதுக்கும் மேற்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளன.

மஹாபொல என்பது புதிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத்தை சவால்களை சமாளிக்கும் வகையில் மாற்றியமைக்கும் ஒரு மையமாகும்.

மஹாபொலவின் நிழலில் கல்வியையும் அறிவையும் இணைக்க முடியும். சவால்களை வெற்றிகொள்வதற்கு பாரம்பரியத்தை மாற்றி புதிய சவால்களை வெற்றிகொள்ளும் ஒரு நாட்டின் தலைமுறையாக நாம் மாற வேண்டும் என்று மஹாபொலவின் இந்த வேலைத் திட்டம் கூறுகிறது. – என்றார். (05)

# நீதிமன்ற தீர்ப்பில் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் மீண்டும் ஆட்சியமைக்க மக்கள் இடமளிக்கார்

## மைத்திரிபால சுட்டிக்காட்டு



நாடு வங்குரோத்தடைந்தமைக்கு காரணமானவர்கள் யார் என்பது அண்மையில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலிருந்து தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறானவர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மக்கள் இடமளிக்க மாட்டார்கள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடுவங்குரோத்து நிலைமையை அடைவதற்கு யார் காரணம் என்று நீதிமன்றம் அண்மையில் தெளிவான தீர்ப்பை வழங்கியது. உலகில் எந்தவொரு நீதிமன்றமும் இவ்வாறானதொரு தீர்ப்பை வழங்கியுள்ளதாக நான் அறியவில்லை. அவ்வாறானவர்கள் மீண்டும் ஆட்சியமைப்பதற்கு மக்களின் மனசாட்சி இடமளிக்கும் என்று நான் நம்பவில்லை.

நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக அவர்கள்அரசியலிலிருந்துவிலகி மக்களின்வாழ்வாதாரத்தைமேம்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்றசெய்திவழங்கப்பட்டுள்ளது.

இலங்கைஎந்தவொருஜனாதிபதியும்செய்யாதவிடயமொன்றை நான் செய்தேன். நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கினேன். 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் ஊடாக நான் அதிகாரங்களை தானம் வழங்கினேன்.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பின்னர் சகல நாடுகளுடனும் இராஜதந்திர நட்புறவுகளைப் பேணக் கூடிய இயலுமை என்னிடம் மாத்திரமே காணப்பட்டது.

எனது ஆட்சி காலத்தில் நான் மக்களுக்கு எவ்வித பிரச்சினைகளையும் ஏற்படுத்தவில்லை. போதைப்பொருளுக்கு எதிராகவும், ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்தேன். – என்றார். (05)

# வீதியில் பொருத்தப்பட்டிருந்த கட்டவுட் வீழ்ந்து இளைஞர் சாவு

கொழும்பு – நீர்கொழும்பு பிரதான வீதியில் கல்வி தொடர்பான கண்காட்சி நிகழ்வு ஒன்றை முன்னிட்டு வீதியில் அமைக்கப்பட்டிருந்த கட்அவுட்டில் பஸ் மற்றும் கார் மோதி கட்அவுட் வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கந்தானை பிரதேசத்தை சேர்ந்த டோன் நிபுன் தனஞ்சன என்ற 29 வயதுடைய இளைஞராவார்.

இவர் கட்அவுட்டிற்கு அடியில் சிக்கி காயமடைந்த நிலையில் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு ராகமை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றுடன் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியிலிருந்து பயணித்த கார் ஒன்று மோதிய நிலையில் இரு வாகனங்களும்கட்அவுட்டின்மீதுமோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தவிபத்தில்அப்பகுதியில்இருந்த இரண்டு வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ளன. (05)

## புதையல் தோண்டிய நால்வர் கைதாகினர்

தொரமடலாவ புதுக்குளம் பிரதேசத்தில் தொல்பொருள்களைப் பெறும் நோக்கத்தில் புதையல் தோண்டிய சந்தேகத்தில் நால்வரை கைது செய்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 21 முதல் 46 வரையான வயதுக்குட் பட்டவர்களாவர்.

தொரமடலாவ புதுக்குளம் பிரதேசத்தில் உள்ள பெண் ஒருவருக்கு சொத்தமான காணியொன்றில் புதையல் தோண்டி வருவதாகப் பொலி-ஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலி-ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# உலகத் தமிழர் பேரவைக்கு கரி ஆனந்தசங்கரி கண்டனம்

உலகத் தமிழர் பேரவையும், கனேடிய தமிழ் காங்கிரஸும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் சந்தித்து கலந்துரையாடியமைக்கு கனேடிய அமைச்சர் கரி ஆனந்தசங்கரி கண்டனம் வெளியிட்டுள்ளார். பாரிய மனித உரிமை மீறல்களுக்காக மஹிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் மீது 2023 ஆம் ஆண்டு ஜனவரி கனேடிய அரசு தடைகளை விதித்தமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்கு பொறுப்புக்கூறலைவலியுறுத்திபலவருடபோராட்டத்திற்கு பின்னரே இந்த தடை விதிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள், சமூக அமைப்புகள், இலங்கை தமிழர்களுடன் கலந்தாலோசிக்காது மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி பாரிய தவறு என்றும் கரி ஆனந்தசங்கரி கண்டனம் வெளியிட்டுள்ளார்.

மேலும் தாய்நாட்டில் உள்ள தமிழ் மக்களின் நலன்களுக்காக செயற்படுவதாக இந்த அமைப்புகள் கூறுவதன் மீதும் இருந்த நம்பிக்கையை இது இழக்கச் செய்துள்ளதாக கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (05)

# குவைத் அரசின் ஆட்சியாளரின் மறைவிற்கு ஹக்கீம் அனுதாபம்

குவைத் அரசின் ஆட்சியாளர் (அமீர்) மேன்மைதங்கிய ஷெய்க் நவாப் அல் அஹ்மத் அல் ஜாபிரின் மறைவையிட்டு, கொழும்பில் உள்ள அந் நாட்டுத்தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாபக் குறிப்பேட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் திங்கட்கிழமை காலையில் தனது அனுதாபங்களைப் பதிவு செய்தார்.

இலங்கைக்கான குவைத் நாட்டின் பொறுப்பதிகாரி உஸ்மான் அல் உமருடனும் அவர் அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்டார். (05)

# அரிசி இறக்குமதிக்கு தனியாருக்கு அனுமதி?

கீரி சம்பா வகை அரிசிக்கு சமமான 50 ஆயிரம் மெற்றிக் தொன் ஜி.ஆர். 11வகை அரிசியை இறக்குமதி செய்ய தனியார் துறையினருக்கு வாய்ப்பு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சந்தையில் அரிசி விலையை கட்டுப்படுத்துவதற்காக உணவு கொள்கைகள் குழுவின் விதந்துரைக்கு அமைய 50,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்காக நவம்பர் 20 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

உள்நாட்டுச் சந்தையில் கீரிச் சம்பா அரிசி மற்றும் சம்பா அரிசி ஆகியவற்றின் விலைகளில் போட்டித்தன்மையை ஏற்படுத்தி, விலையின் நன்மையை நுகர்வோருக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, கீரி சம்பா அரிசிக்கு சமமான 50,000 மெற்றிக் தொன் ஜிஆர் 11 அரிசியை தனியார் துறை மூலம் இறக்குமதி செய்வதற்காக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# பெண்கள், சிறுவர் பிரச்சினைகளை முறையிடத் தொலைபேசி இலக்கம்

பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடுகள் அளிக்கும் வகையில் தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தவுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்திட்டம் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமையில் செயற்படவுள்ளது.

24 மணித்தியாலமும் செயற்படக் கூடியதாக உள்ள இந்த தொலைபேசி இலக்கத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும். இந்தத் தொலைபேசி இலக்க சேவையில் பெண் பொலிஸார் கடமையில் இருப்பார்கள்.

இந்த தொலைபேசி இலக்கத்துடன் நாட்டில் எந்த பகுதியிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (05)

# மீனவர்களின் பிள்ளைகளுக்கு விசேட நல நிதிக் கொடுப்பனவு

## யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று வழங்கப்பட்டது











சர்வதேச கடற்றொழிலாளர் தினத்தினை முன்னிட்டு கடற்றொழில் அமைச்சினால் கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு விசேட நலநிதிக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று மதியம் 2 மணியளவில் இடம்பெற்றது.

நடந்து முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவும் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உயரதிகாரிகள், கடற்றொழிலாளர்கள் ,மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கல்முனை மலேரியா ஒழிப்பு பணியாளர்கள் கௌரவிப்பு

கல்முனை பிராந்திய மலேரியா தடை இயக்க பிரிவின் நலன்புரிச் சங்கத்தால், மலேரியா ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் சுகாதாரப் பணியாளர்களைக் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது.

வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌாத் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், சுகாதார பணியாளர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த சுகாதார பணியாளர்களின் பிள்ளைகளும் அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர். (05)

# யாழில் மாவாவுடன் இளைஞர்கள் கைது

யாழ். கொக்குவில் பகுதியில் திங்கட்கிழமை மாவா பாக்குடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த இளைஞர்களிடம் இருந்து 50 கிராம் அடங்கிய மாவா பாக்கு பொட்டலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (05)

# படுகொலைக் குற்றச்சாட்டில் இலங்கையர் ஆஸியில் கைது

கன்பரா மிருகக்காட்சிசாலையில் உள்ள சமையலறைக் களஞ்சிய அறையில் இளம் பெண்ணான சக ஊழியரைக் கத்தியால் குத்திக் கொன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த சமையல்காரர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) செய்தி வெளியிட்டுள்ளன.

29 வயதான ஜீட் விஜேசிங்க திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இவரது உடம்பில் சில காயங்கள் காணப்பட்டன எனவும் அவை அவராலேயே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டவை எனவும் தெரிய வந்துள்ளது.

பலியானவர் 29 வயதான பூட்டான் நாட்டவர் எனத் தெரிய வந்துள்ளது. விஜேசிங்க மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதை பொலி- ஸார் செவ்வாய்க்கிழமை உறுதிப்படுத்தினர். (05)



# கிளிநொச்சியில் களவாடப்பட்ட மோ.சைக்கிள் குடாநாட்டில் மீட்பு

*கிளிநொச்சி நீதிமன்றம் முன்பாக ஏ - 9 வீதியில் நிறுத்தி வைக்கப்படிருந்த சமயம் நவம்பர் 11ஆம் திகதி களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.*

*மோட்டார் சைக்கிள் ஒன்றின் சொக்கற்சோவர் ஒன்றை விற்பனை செய்ய வந்த ஒருவர் மீது சந்தேகம் கொண்டு அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தியபோது அது திருடப்பட்ட மோட்டார் சைக்கிளின் உதிரிப் பாகம் அது என்பது தெரியவந்திருக்கிறது.*

*சந்தேகநபரைக் கைது செய்து மேலும் விசாரணை நடத்தியபோது கிளிநொச்சி நீதிமன்றத்தின் முன்பாகத் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்களாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்காக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டதும் தெரியவந்திருக்கிறது. சந்தேகநபரை டிசெம்பர் 14 அன்று கைது செய்த பொலிஸார், அவரை கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அவர்கள் மேலக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். 123*

# போதைப்பொருளில் சம்பாதித்த பணத்தில் வாங்கிக் குவித்த 8 வாகனங்கள் பறிமுதல்

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திருட்டுக் குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு சொந்தமான 67 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி கீதால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளுக்கு அமைய சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் 6 பிரிவினர் மேற்கொண்ட வௌ;வேறு தேடுதல் நடவடிக்கையின் போது போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு சொந்தமான 670 லட்சம் ரூபா பெறுமதியான 8 வாகனங்கள் இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த வாகனங்கள் அனைத்தும் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் கீழ் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனிடையே பாதாளக்குழு மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களின் வீடுகள், ஹோட்டல்கள், விடுதிகள் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதுடன் 3 ஆயிரத்துக்கும் அதிகமான பாதாளக்குழு செயற்பாட்டாளர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. - என்றார். (05)

# பல்வேறு பிரதேசங்களில் மேற்கொண்ட சோதனையில் ஹெரோயின் போதைப்பொருள்களுடன் 6 பேர் கைது

பேலியகொடை, துங்கல்பிட்டிய, கல்கிஸை, கொழும்பு போன்ற பல்வேறு பிரதேசங்களில் பொலி- ஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் ஹெரோயின் போதைப்பொருள்களுடன் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. கைது செய்- யப்பட்டவர்கள் 50, 34, 35, 37, 48, 35 மற்றும் 32 வயதுடையவர்களாவர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பேலியகொடையில் 12 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் துங்கல்பிட்டியவில் 30 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கல்கிஸை பிரதேசத்தில் 10 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கொழும்பில் 5 கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஹோமாகம வங்கியில் ஆயுததாரிகள் கொள்ளை

ஹோமாகம பிட்டிபன பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பிரஜாமுல வங்கிக்குள் துப்பாக்கியுடன் நுழைந்த இருவர் அங்கிருந்து சுமார் ஏழு லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார் என ஹோமாகம தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை இடம்பெற்றுள்ளது.

தலகல பிரதேசத்திலிருந்து வந்த கொள்ளையர்கள் பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு அதே திசையில் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# கோடாவுடன் ஒருவர் கைது

களுத்துறை - இங்கிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோதமாக மதுபானம் தயாரிக்க பயன்படுத்தப்படும் கோடாவுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர் களுத்துறை - இங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடையவராவார்.

இங்கிரிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் 1,290 லீட்டர் கோடா போத்தல்கள் 7 பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இங்கிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# திருக்கோவிலில் ஒளிவிழா









திருக்கோவில் புனித சூசையப்பர் தேவாலயத்தில் இவ்வாண்டிற்கான வருடாந்த ஒளிவிழாவும் குடும்ப ஒன்று கூடலும் பங்கு தந்தை வண. அன்ரனி டிலியா தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலைஇடம்பெற்றபோது. (படங்கள் வி.ரி.சகாதேவராஜா)

# 20 பேர் கொண்ட முதல் குழு இஸ்ரேலுக்குப் புறப்பட்டது

## விவசாயத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களாக

இஸ்ரேலில் விவசாயத் துறையில் தொழிலுக்காக தெரிவு செய்யப்பட்ட இருபது பேர் கொண்ட இரண்டாவதுகுழுநேற்றுக்காலை இஸ்ரேல் நோக்கிப் புறப்பட்டது.

முன்னதாக, நேற்று முன்தினம் முப்பது பேர் கொண்ட முதலாவது குழு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இஸ்ரேலுக்கு பயணமானது.மேலும் முப்பது பேர் கொண்ட மற்றுமொரு குழு நேற்று இரவு இஸ்ரேலுக்கு சென்றுள்ளது.

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு நேற்று இடம்பெற்றநிகழ்வில், இஸ்ரேலில் விவசாயத் துறையில் தொழிலுக்காக புறப்படும் முதற்கட்டத் தொழிலாளர்களுக்கான விமானப் பயணச்சீட்டுகள் அமைச்சர் தமனு நாணயக்காரவினால் வழங்கப்பட்டன.

இரு நாடுகளுக்குமிடையில் இதற்குமுன்னர்மேற்கொள்ளப்பட்ட இருதரப்பு உடன்படிக்கைக்கு அமைவாக விவசாயத் துறையில் தொழிலுக்காகதொழிலாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அடுத்த சில வாரங்களில் மேலும் பத்தாயிரம் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் தொழிலாளர் மற்றும்வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார இதன்போது தெரிவித்தார். இஸ்ரேலில் விவசாயத் துறையில் தொழில் வாய்ப்பைபெற்றுக்கொள்வதற்காக இடைத்தரகர்கள் எவருக்கும் பணம் வழங்க வேண்டாம் என கேட்டுக்கொண்ட அமைச்சர், பணம் வழங்கப்பட்டதாக தகவல் வெளியானால், பணம் கொடுத்து அங்கு சென்ற தொழிலாளர்களை அழைத்து வருவதற்காக இஸ்ரேலுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதற்கு மேலதிகமாக இஸ்ரேலில்கட்டுமானத்துறையில் இருபதாயிரம்தொழிலாளர்களை இணைத்துக்கொள்ள இஸ்ரேல் இணக்கம்தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

# கில்மிஷாவுக்கு ரணில் பாராட்டு

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் 'சீ' தமிழ் தொலைக்காட்சி அலைவரிசை நடத்திய சரிகம பாலிட்டில் சம் - 2023' போட்டியில் மகுடம் சூடிய இலங்கையின் கில்மிஷா உதயசீலனுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். 14 வயதுடைய கில்மிா உதயசீலன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதுடன், இலங்கைப் பெண் ஒருவர் இந்திய தொலைக்காட்சி பாடல் போட்டியில் வெற்றி பெற்றது இதுவே முதல் முறையாகும்.

கில்மிஷா உதயசீலன் நாட்டிற்கு புகழ் சேர்த்தமைக்கு பாராட்டு தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாழ்த்துச் செய்தியொன்றைஅனுப்பிவைத்துள்ளதுடன், சிறுமியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எதிர்காலக் கல்வி மற்றும் இசை வாழ்வில் வெற்றிபெற தனது ஆசிகளையும் தெரிவித்துள்ளார்

# அ.அட்டை படத்துக்கான கட்டணம் திடீர் அதிகரிப்பு

அடையாள அட்டைக்கான நிழற்படத்திற்கு பதிவுசெய்யப்பட்ட நிழற்படப் பிடிப்பாளர் அறவிட வேண்டிய கட்டணம் 400 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சரின் கையொப்பத்துடன் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 150 ரூபா கட்டணம் அறவிடப்பட்டதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடையாள அட்டை அல்லது அடையாள அட்டையின் நகலைப் பெற, விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்பட்ட புகைப்படக் கலைஞரால் எடுக்கப்பட்ட படங்களை முடெஷ்நெ ஊடாக ஆட்பதிவு திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பேரிடர் முன்னெச்சரிக்கை பொறிமுறையை மேலும் பலப்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம்

பேரிடர்கள் தொடர்பான முன் எச்சரிக்கை பொறிமுறையை மேலும் பலப்படுத்துவதன் ஊடாக இலங்கை மக்களின் வாழ்க்கையை மேலும் பாதுகாக்கும் விதமாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் எஸ்எல்டி மொபிடல், ஹட்ச், டயலொக், ஏர்டெல் உள்ளிட்ட தொலைபேசிநிறுவனங்கள்இணைந்து முழுமையான அனர்த்த முன் எச்சரிக்கை பொறிமுறையொன்றை வெளியிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடர்முகாமைத்துவமத்தியநிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் (ஓய்வு) எஸ்.ரணசிங்க, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் டீ.எம்.எம்.திசாநாயக்க ஆகியோர் கைசாத்திட்டதோடு, இதன்போது பிரதான தொலைபேசி நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

அதன்பங்குதாரர்களான, டயலொக் ஆசியாட்டா குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுபுன் வீரசிங்க, ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜானக ஆர். அபேசிங்க, பாரதீ எயர்டெல் தனியார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசீஸ் குப்தா, மொபிடெல் தனியார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுதர்ன கீகனகே, ஹவிசன் டெலிகொமினிகேன் தனியார் நிறுவனத்தின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி சுமித்ரா குப்தா உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி கைத்தொலைபேசிகளுக்கான செயலியை தேசிய பாதுகாப்பு தினமான 2024 டிசம்பர் 26 ஆம் திகதி வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது.

வானிலை மற்றும் காலநிலை அனர்த்தங்கள் மற்றும் ஏனைய காரணிகளால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் உரிய முன் எச்சரிக்கையுடன்செயற்படும்பட்சத்தில், அதனால் ஏற்படக்கூடிய உயிர்ச் சேதங்களைக் குறைக்க முடியும். அதற்கமையபுதியதொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொலைபேசி சேவைகள் வாயிலாக முழுமையான முன் எச்சரிக்கைகளை வழங்க முடியும்.

அதற்கமைய சுனாமி எச்சரிக்கை நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கில் இந்த பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட உள்ளதோடு, அனர்த்த முகாமைத்துவப் பொறிமுறைக்குள் நாட்டின் 14 மாவட்டங்களில் சுனாமிஅச்சுறுத்தலுக்குமுகம்கொடுக்க கூடியவர்கள் என அறியப்பட்ட சுமார் 60,000 பேருக்கு 'சுஷ்பெ வுழநெ' முறையிலான ஒலியுடன் கூடிய முன் எச்சரிக்கை செய்தியொன்றை அனுப்ப எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்காக இரவு வேளைகளில் சயிரன் ஒலியுடன் கூடிய முன் எச்சரிக்கை பொறிமுறையொன்று உருவாக்கப்படும். மேற்படித்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு பாதிப்புக்கள் தொடர்பிலான முன் எச்சரிக்கைகளையும் இதனூடாக வழங்குவதால் முழுமையான முன் எச்சரிக்கை பொறிமுறையொன்றை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, அனர்த்த முகாமைத்து மத்திய நிலையம் மற்றும் தொலைபேசி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# மாவீரர் நிகழ்வால் கைது செய்யப்பட்ட மாணவன் உட்பட 4 பேருக்குப் பிணை

பயங்கரவாததடைச்சட்டத்தின்கீழ் மட்டக்களப்பு -வந்தாறுமூலையில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவன் உள்ளிட்ட நான்கு பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை நேற்று வாழைச்சேனை நீதிமன்றில் இடம்பெற்ற போது பிணை வழங்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைவாக, வாழைச்சேனை பொலிஸாரினால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து வாழைச்சேனை நீதவான் ஆ.ஜ. ஆ.ரிஸ்வான் சந்தேகநபர்கள் நால்வருக்கும் பிணை வழங்கினார்.

இந்த வழக்கு மீண்டும் ஜனவரி முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மட்டக்களப்பு-வந்தாறுமூலையில் பாடசாலை மாணவன் உள்ளிட்ட நான்கு பேரும் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறைச்சாலை பஸ்களிலும் இனி சி.சி.ரி.வி. கமெராக்கள்

சிறப்பு பிரிவு கைதிகளை ஏற்றிச்செல்லும் சிறைச்சாலை பஸ்களில் சி.சி.ரி.வி கமராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி டீ திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கில் பஸ்களில் சி.சி.ரி.வி கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

சிறைச்சாலைகளில் இருந்து கைதிகள் வெளியில் அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் இதனூடாக கண்காணிக்க முடியும்

பஸ்ஸிற்குள் கைதிகள் மற்றும்உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளும்செயற்பாடுகள் தொடர்பிலும் இதனூடாக கண்காணிக்க சந்தர்ப்பம் கிடைக்கும்.

சில சந்தர்ப்பங்களில் வெளியில் இருந்து பஸ்ஸிற்குள் போதைப் பொருளை வீசும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. சிறைச்சாலைகளில் தற்போது போதைப் பொருட்களுக்கு அடிமையான சுமார் 14,500 பேர் உள்ளனர் என்றார்.

# மஹர சிறை பள்ளிவாசலை மீண்டும் திறக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் ரிஷாத் எம்.பி. கோரிக்கை

மூடப்பட்டுள்ளமஹரசிறைச்சாலைபள்ளிவாசலை மீளத்திறக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எவ்வித காரணங்களும் இல்லாமல் தொடர்ந்தும் இதனை மூடிவைத்திருப்பது உகந்ததல்ல எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

மஹர சிறைச்சாலை வளாகத்தில் உள்ள பள்ளிவாசலுக்கு நேற்று வரகை தந்த அவர், செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

மஹர பிரதேசத்தில் பல கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றார்கள். 1903ஆம் ஆண்டு இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுக்காக கட்டப்பட்ட இந்தப் பள்ளிவாசல், கடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவ தினத்திலிருந்து இன்று வரை மூடப்பட்டுள்ளது. மஹர சிறைச்சாலை வளாகத்தில் 100 வருட காலத்துக்கும் மேற்பட்ட வரலாறு கொண்ட இந்தப் பள்ளிவாசலிலே, இப்பிரதேச முஸ்லிம்கள் தங்களது சமயக் கடமைகளை நிறைவேற்றி வந்தனர்.

இங்கு வாழ்கின்ற சுமார் 350க்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் தமது மார்க்கக் கடமைகளில் ஈடுபட முடியாமல் கஷ்டப்படுகின்றனர். ஐவேளை தொழுகைக்காக பள்ளிக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. ஜும்ஆ தொழுகை மற்றும் ஒருவர் மரணித்துவிட்டால் அவருக்காக மார்க்க கடமைகளை முன்னெடுக்க முடியாத ஒரு துரதிஷ்ட நிலையில் மக்கள் வாழ்கின்றனர். இவ்வாறான பல கஷ்டங்களுக்கு அவர்கள் நாளாந்தம் முகங்கொடுத்து வருகின்றனர்.

எனவே, இந்தப் பள்ளிவாசலை மீண்டும் அவர்களுக்கு வழங்குமாறு இங்கு வந்து நாம் வேண்டிநிற்கின்றோம். இது சம்பந்தமாக நாங்கள் பாராளுமன்றத்தில் பேசியபோது, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ எமக்கு வழங்கிய பதில் ஏற்புடையதாக இல்லை. அதனால், ஜனாதிபதியிடம் இந்த விடயத்தை முன்வைத்திருக்கின்றோம்.

ஜனாதிபதி அவர்கள் இந்த விடயத்தில் தலையீடு செய்து, இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். மஹர பள்ளிவாசலை அந்த மக்களுக்கு மீண்டும் வழங்க வேண்டும். இல்லாவிட்டால், அந்தப் பிரதேச மக்கள் தொழுகை நடாத்துவதற்காகப் பள்ளிவாசல் ஒன்றை கட்டுவதற்குப் பொருத்தமான காணியை வழங்க வேண்டும். இரண்டில் ஒன்றை அவசரமாகச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

இதேவேளை, மஹர பள்ளிவாசல் நிர்வாக சபையின் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரும் எம்மோடு இங்கு வந்திருக்கின்றனர். நான்கு வருட காலமாக இவர்களது பிரச்சினையை சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், கேட்பார்பார்ப்பார் அற்ற நிலையில் இந்தப் பிரச்சினை கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இதனால், இங்கு வாழும் மக்கள் மிகவும் மன வேதனையில் உள்ளனர். எனவே, இந்தப் பள்ளிவாசலை உடனடியாக மீண்டும் வழங்குமாறு அவர்கள் வினயமாக கேட்டுநிற்கின்றார்கள். ஆகையால், ஜனாதிபதி அவர்கள் இந்த விடயத்தில் தலையீடுசெய்து, உடனடியாக இந்தப் பள்ளிவாசலை மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்' என்றார்.

# இன்று முதல் மழை குறையலாம்



நாட்டில்நிலவும்மழையுடனானவானிலைஇன்று முதல்குறைவடையக்கூடுமெனவளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்திணைக்களம் விடுத்துள்ள அறித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும்.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களின் சில பகுதிகளிலும் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம்.

இதனிடையே, வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடல் பிராந்தியங்களில் பலத்த காற்று வீசக்கூடும். இதானால் மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வங்காளவிரிகுடாகடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். இதனால் வட மாகாண மீனவர்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என்றுள்ளது.




# பலாலிக்கு வந்த விமானம் தரையிறங்காமல் திரும்பியது

## சீரற்ற காலநிலை காரணமாக

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த விமானம் சீரற்ற காலநிலை காரணமாக தரையிறங்க முடியாமல் திரும்பிச் சென்றுள்ளது.

இந்தியாவின் சென்னை விமான நிலையத்தில் இருந்து பயணிகளுடன் வந்த விமானமே திரும்பிச் சென்றுள்ளது. நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் தரையிறங்க வந்த விமானம் பல தடவைகள் முயற்சி செய்தும் தரையிறங்க முடியாமல் போனதால் திரும்பிச் சென்றது.

மோசமான காலநிலையே விமானம் தரையிறங்க முடியாமல் போனமைக்கான காரணம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வற் வரிக்கு மத்தியிலும் மின் கட்டணம் குறையும்

## ஜனவரியில் நடவடிக்கை என்கிறார் அமைச்சர்



எரிபொருள்களின் மீது அரசு வற் வரி விதித்தாலும் மின் கட்டணம் ஜனவரி மாதத்தில் குறைக்கப்படும் என்று மின் சக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

2024 ஜனவரி மாதம் மேற்கொள்ளப்படவுள்ள மின்கட்டணத்திருத்தத்தில் மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்க முடியும் எனவும் அதில் வரி எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உத்தேச புதிய மின்சக்தி சட்ட மூலம் தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து தற்போது பல்வேறு ஆலோசனைகள் எமக்குகிடைத்துவருகின்றன. உத்தேச புதிய மின்சக்தி சட்ட மூலம் தொடர்பில் ஆர்வமுள்ள தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மின்சார நுகர்வோர் உள்ளிட்ட எந்தவொரு தரப்பினரும் தமது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை சமர்ப்பிக்கலாம்.

அந்தக் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை இன்று முதல் ஜனவரி 3ஆம் திகதி வரை எழுத்து மூலம் எமக்கு சமர்ப்பிக்கலாம். உத்தேச புதிய சட்ட மூலம் மின்சக்தித் துறையின் மறுசீரமைப்புகளுக்கும் எதிர்காலத்தை வலுப்படுத்தக்கூடிய சட்ட மூலமாக மாற்ற முடியும். அந்த வகையில் அனைத்து தரப்பினரும் வழங்கும் ஆலோசனைகளைக் கவனத்திற்கொண்டு தயாரிக்கப்படும் சட்டமூலத்தை ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் எதிர்பார்க்கிறோம்.

மின் கட்டணத்தை ஜனவரியில் திருத்தம் செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அதிகபட்ச திறனில் நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. புதைபடிவ எரிபொருட்களைப்பயன்படுத்துவதால் மின் உற்பத்திக்கு ஏற்படும் அதிக செலவைக் கருத்தில் கொண்டே ஒக்டோபர் மாதத்தில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், தற்போது காலநிலை மாறியுள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக மழை பெய்து வருவதாலும், மழை இன்னும் இரண்டு வாரங்களுக்கு தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாலும், மின் கட்டணத்தைத் திருத்த முடியும் என இலங்கை மின்சார சபை எமக்கு அறிவித்துள்ளது.

அதன்படி, டிசெம்பர் மாதத்தில் உள்ள மின்சாரசபையின் கையிருப்பையைக் கருத்தில் கொண்டு, ஜனவரியில் நடைபெறவுள்ள அடுத்த கட்டணத் திருத்தத்தில் மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்க முடியும் என நாம் நம்புகிறோம்.

ஜனவரி மாத மின் கட்டண திருத்தத்தில் ஒருபோதும் வற் வரி தாக்கத்தை செலுத்தாது. மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் நெப்தா மற்றும் நிலக்கரிக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் மின்சக்தித் துறைக்கு வற் பொருந்தாது என்பதையும் கூற வேண்டும்.

வற் வரி எரிபொருள் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ஆனால் அந்தப் பாதிப்பைத் தணிக்க நாங்கள் தற்போது ஏனைய மாற்று வழிகள் குறித்து கலந்தாலோசித்து வருகிறோம். அதன்பிரகாரம் ஜனவரியில் எரிபொருள் விலையை திருத்தவும் தயாராகி வருகிறோம். அதன்போது எவ்வித எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்பட இடமளிக்க மாட்டோம். தற்போது தேவையான எரிபொருள் கையிருப்பு எம்மிடம் உள்ளது.

கடந்த நவம்பர் மாதம் மற்றும் எதிர்வரும் ஜனவரி மாதம் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் அளவு குறைந்ததால், இரண்டு வகையான எரிபொருள் வகைகள் தற்போது அதிகளவில் கையிருப்பில் உள்ளன. சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்பட்ட உற்பத்திகளினால் இலங்கை களஞ்சிய முனையத்தின் தாங்கிக் கட்டமைப்பு அதன் அதிகபட்ச கொள்ளளவை எட்டியுள்ளது.

அதன்படி, நாட்டில் உள்ள அதிகப்படியான எரிபொருளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் அளித்தது.

சிலர் இந்திய சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நாட்டின் சூரிய மின் நிலையங்களுடன் ஒப்பிட்டு பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். ஆனால், இந்திய சூரிய மின் உற்பத்தி நிலையங்களை எமது நாட்டு சூரிய மின் நிலையங்களுடன் ஒப்பிட முடியாது. இந்தியா சொந்தமாக சோலார் பேனல்களை உற்பத்தி செய்யும் நாடு.

நமது நாடு சோலார் பேனல்களை உற்பத்தி செய்வதில்லை. நாம் அனைத்தையும் இறக்குமதி செய்ய வேண்டும். உற்பத்திச் செலவில் நமது இரு நாடுகளுக்கும் இடையே பெரும் இடைவெளி காணப்படுகின்றது. மேலும் காற்றாலை மின் உற்பத்தியில் டிரான்ஸ்மிஷன் லைன் கட்டமைப்புகளிலும் இந்த நிலைமை காணப்படுகின்றது என்றார்.


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk